1182

REGISTERED No. M. 6165. அறு. 2

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

மார்ச்சு 1957.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| உலகத்தைக் காப்பாற்றும் இஸ்லாம் ... ... | |
| இஸ்லாமிய சரித்திரச் சாரம் (T. F. R. மஆலி ஸாஹிபு-பாகவி) ... | 7 |
| ஷாபிஈ மத்ஹபின் சிறப்புக்கள் ... ... ... | 11 |
| வணங்குவது எதை எஸ். எம். முஹம்மது முஸ்தபா ... ... ... | 15 |
| தேவ்பந்த் தாருல் உலூம் அளிக்கும் திட்டம் (மாஸ்டர் கமால் பாபு) ... ... ... ... | 17 |
| நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும் ... ... ... | 21 |
| திருக் குர்ஆன் சார சங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) ... ... ... ... ... ... | 25 |
| சிறுவர் பகுதி ... ... ... ... ... | 28 |
| ...ப் பறவை சிப்கத்துல்லா அல்லது ...கலக்கிய தூயவர் ... ... ... ... | 30 |


... இஸ்லாம் ஆபீஸ் :
...ஹரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - MAR 1957
MADRAS

3L
Q7ππ211, N124F1
N57.
187061

1182
1.57

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| தனிப் பிரதி | அணா. | 0–2–0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–0–0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.


## லைலா மஜ்னூன்

அரபு தேச சர்தாருடைய அருமைக் குமாரனாகிய மஜ்னூ னென்னும் வாலிபன், அழகில் சிறந்த லைலா என்னும் ஒரு பெண்ணரசி பேரில் காதல் கொண்டு, ஒருவரை யொருவர் நேசித்து பல துன்பங்களுக்கு இலக்காகி, இறுதியில் சந்திக்கும் வரை நடந்துள்ள சரிதை இது. இது உர்து பாஷையில் லைலீ மஜ்னூ னென்னும் பெயர் பெற்ற காவியமாக விளங்கி வந்ததை தமிழ் பாஷையில் மொழி பெயர்த்து அருமையான நாவலைப் போல் வசன ரூபமாய் அமைக்கப் பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ. 1—4—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

الإسلام

# பத்ஹுல் இஸ்லாம்

மார்ச்சு—1957.

## உலகத்தைக் காப்பாற்றும் இஸ்லாம்.

"உலகத்தில் அமைதியையும் சமாதானத்தையும் எப்படி நிலை நிறுத்தி வைப்பது; அழிவிலிருந்து உலக மக்களை எப்படி காப்பாற்றுவது" என்று இன்று எல்லா தேச அதிபதிகளும், தலைவர்களும் யோசித்தும் முயற்சித்தும் வருகிறார்கள்.

இந்த இருபதாம் நூற்றாண்டில், இரண்டு பெரிய மகா யுத்தங்கள் நடந்து முடிந்து விட்டன. அவற்றின் விளைவாக உலகத்திற்கும் உலக மக்களுக்கும் ஏற்பட்ட நாசங்களும் கஷ்டங்களும் அளவிடற் கரியதாகும். இவ்வுலகில் மனித சமுதாயத்தினர் சென்ற ஓராயிரம் வருஷங்களாக வளர்த்துப் பாதுகாத்து விருத்தி செய்து வைத்திருந்த நிர்மாண நற்காரிய மெல்லாம் அழிந்து போய் விட்டன; தூய்மையும் ஒழுக்கமும் அமைதியும் சீர்குலைந்து போய்விட்டன. அதாவது பெரும் பிரயாசையினூடே ஸ்தாபிதம் செய்து வைத்த தூய நாகரிகம், நல்ல ஒழுக்கம், சமத்துவம், சகோதரத்வம், பிரஜாவுரிமை, மனச்சாட்சி, தர்ம நியாயம்—என்ற தார்மீகக் கட்டிடங்களெல்லாம், யுத்தப் பேய்ச்செயலினுல் இடித்துத் தள்ளப்பட்டு நிர்மூலமாய் போய்விட்டன.

முன் எப்பொழுதையும் விட இப்பொழுது உலகத்துக்கு சாந்தியும் சமாதானமும் சுமூக வாழ்வும் அத்தியாவசியமாய் இருந்து வருகின்றன. சர்வ லோகத்தின் ஆத்ம அறிஞர்களும், ராஜ்யத் தலைவர்களும், தேச அதிபதிகளும் இன்னொரு முறை அந்தப் பழைய

யுத்த பூதம் தலைதூக்கி எழுந்து வந்து விடாதிருக்க, என்ன செய்ய வேண்டுமென மிகப் பிரயத்தனம் எடுத்து வருகிறார்கள்.

யுத்தம் ஏன் ஏற்படுகிறது? போர் ஏன் மூளுகிறது? மனிதர்க்கு மனிதர் ஏன் விரோதம் பாராட்டுகின்றனர்? ஒரு தேசம் இன்னொரு தேசத்தின் மீது ஏன் பகைமையும் வஞ்சமும் கொள்கிறது? என்று ஆத்ம அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். ஆனால் தேசங்களை ஆளும் அதிகார வர்க்கங்களோ, தங்கள் பேச்சாலும் செயலாலும் அரசியல் முறைகளாலும் மனப் போக்காலும், சில தகாத காரியங்களைச் செய்து விடுகிறார்கள். இதனால் யுத்தப் பேய் கட்டு அவிழ்த்துக் கொண்டு நாசகாரியத்தில் ஈடுபட்டுத் தாண்டவமாடத் தொடங்கி விடுகிறது.

மனித சமுதாயத்தினருக்கு, மன அமைதியும் தூயவாழ்வும் சமாதான சூழ்நிலையும் அத்தியாவசியம். இதற்கு, மனிதர்களிடையே அமைதியும் சமாதானமும் வேண்டும். ஒருவர்க்கு ஒருவரால் நன்மை உண்டாய்க் கொண்டு—தீங்கு உண்டாகா திருந்தால் தான், மன அமைதியாய் சமாதானமாய் உலகில் எல்லோரும் வாழ முடியும்.

மனித சமுதாயத்தின் உள்ளம் தான் உலக சமாதானத்துக்கு உறைவிடம். அந்த உள்ளத்தில் தூய்மையும் பரஸ்பர அன்பு விசுவாசமும் நிலவி குடி கொண்டிருந்தால், உலக மெல்லாம் சுபீக்ஷ மடைகின்றன. அந்த நல்லெண்ணமும் தூய தன்மையும் மனித சமுதாயத்தின் உள்ளத்தில் ஒழிந்து போனால், அதற்கு நேர்மாறான அழுக்காறும் பகைமையும் பரஸ்பரப் போராட்டமும் நேரிடுகின்றன.

விருக்ஷங்கள் அடர்ந்த காட்டில் மழை பெய்து பசுமை நிறைந் திருந்தால், அது காண்பதற்கு அரிய இயற்கை வனப்போடு விளங்கு கிறது. அங்கு மழை அற்று வரட்சி மேலிட்டு உஷ்ணம் மிகுந்து அவல நிலைமை ஏற்பட்டால், அவ்வனம் பட்சிகள் மிருகங்கள் வாழ்வ தற்கும் லாயக்கில்லாத பயங்கரக் காடாய்ப் போய் விடுகிறது. அங்கு மிருகங்கள் கோபங் கொண்டு ஒன்றை யொன்று அடித்துத் தின்னவும் அட்டகாசம் புரியவும் தொடங்கி விடுகின்றன. வலிய பிராணிகளின் கொடுங்கோன்மை அதிகரித்து விட்டால், எளிய பிராணிகளும் ஜீவ ஜந்துக்களும் அங்கு இருக்க மனங் கொள்ளாமல் வேறிடம் ஓடிப் போய் விடுகின்றன. அது மட்டுமல்ல, மூங்கிற் காட்டில் வெய்யில் உஷ்ணம் அதிகரித்து அவை ஒன்றோடொன்று உராய்ந்து தீப்பிடித்துக்

18709

கொள்கிறது. அந்தத் தீ காட்டில் பல திக்கிலும் பரவி, எங்ஙனும் பெரும் சேதத்தையும் நாசத்தையும் உண்டாக்கி விடுகின்றன.

இந்த இயற்கை நியதியே, மாந்தர் வாழும் நகர் புரங்களிலும் நிகழ்ப் பெறுகின்றன. மனத்தூய்மையும் சுபிக்ஷ வாழ்வு முறையும் அற்றுப் போனுல், விரோதம் என்ற வரட்சி பரவி, யுத்தம் என்ற தீயினுல் உலகமெல்லாம் நாசமும் நஷ்டமும் குழப்பமும் கொந்தளிப்பும் உண்டாகின்றன. மூங்கிற் புதரில் உற்பத்தியாகும் தீயானது காட்டின் மற்றப் பகுதிகளுக்கெல்லாம் பரவிச் செல்வது போல், உலகின் ஒரு தேசத்தில் உண்டாகும் பகைமைப் பூசல் என்னும் யுத்தத் தீ உலகத்தில் மற்ற தேசங்களுக்கும் பரவிச் சென்று, பாரெங்கும் படு நாசத்தை உண்டாக்கி விடுகிறது.

நம் முற்காலத்துப் பெரியோர்களான நபிமார்களும், ஸஹாபாக்களும், இமாம்களும், வலிய்யுல்லாஹ்களும், இத்தரணியில் அமைதியும் சமாதானமும் சதா நிலவி யிருப்பதற்காக, சாந்த வழியையும் இஸ்லாம் என்னும் சமாதான மார்க்கத்தையும் போதித்துச் சென்றுள்ளார்கள். அந்த சாந்தி சமான மார்க்கம் தீனுல் இஸ்லாம் என்ற பெயரால் அழைக்கப்பட்ட போதிலும், அது மனித சமூகம் நல்லொழுக்கத்திற் சிறந்து, அமைதியும் சமாதானமும் நிலவி, உலகில் அமைதி சமாதானமாய் வாழவேண்டு மென்றும், மாந்தர் ஒருவர்க்கொருவர் சமத்துவமாயும் சகோதரத்துவமாயும் ஒருமித்து அண்மித்து கூடிக் குலாவி இனிது வாழவேண்டு மென்றும் வலியுறுத்தி வருகின்றது.

இஸ்லாம் என்னும் சாந்தி சமாதான சன்மார்க்கம், இன்றைக்கு ஆயிரத்து நாநூறு வருஷங்களுக்கு முன் பரிபூர்ணமாய் போதிக்கப்பட்டது. அது உலகத்தினரால் மனப்பூர்வமாய் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அனுஷ்டானத்தில் இருந்துவந்தது. அந்த சத்திய போதனையும் அனுஷ்டானத்தில், ஜன சமூகத்தின் நடைமுறையில் இருந்து வரும் வரை உலகத்தில் அமைதி சமாதானம் பூரணமாய் குடி கொண்டிருந்தது; ஜனசமுதாயத்தினர் நற்குண முடையோராய், நல்லொழுக்கஸ்தராய், அமைதியான மனத்தினராய் வாழ்ந்து வந்தனர். இதற்கு ஹிஜ்ரீ முதல் நூற்றுண்டின் சரித்திரச் சம்பவங்களே போதிய சான்றுகும்.

இன்றைய உலகத்தில் அரசியல் திட்டங்களும், ராஜ்யப் புனருத்தாரண 'ஸ்கீம்' களும், ஐந்து வருஷத் திட்டங்களும், பஞ்ச சீலக் கோட்பாடுகளும் வேண்டற்பால தென்று பல்லோராலும் பல தேசத்

32
O7m211, N24 F1
X13

தாராலும் பேசப்பட்டு வருகிறது. அதற்காக பலகோடி ரூபாய்களும் டாலர்களும் செலவிடப்பட்டு வருகின்றன. அத்துடன் குடியரசு என்றும், ஜனநாயகம் என்றும், கூட்டுறவு என்றும், சோஷலிஸம் என்றும், கம்யூனிஸம் என்றும் என்னென்னவோ பேசப்பட்டு வருகின்றன. இதெல்லாம் யுத்த பயம் நிறைந்த இந்த 20-ம் நூற்றாண்டில்தான் பேசப்பட்டு வருகின்றன. இன்றைக்கு 1400-வருஷங்களுக்கும்முன் கம்யூனிஸம், சோஷலிஸம், ரிபப்ளிக் என்பன போன்ற பதங்களெல்லாம் கிடையாது. இஸ்லாம், ஈமான், பக்தி, ஒழுக்கம், நற்குணம், அன்பு, விசுவாசம், சமத்துவம், சகோதரத்துவம் என்பன போன்ற நல்ல சொற்களே வழக்கத்தில் இருந்து வந்தன. திருநபியும் நபித் தோழர்களும் மகான்களும் பெரியோர்களும், இத்தகைய நற்குண நல்லொழுக்கத்தை உலக சமாதானத்துக்கு உன்னத லக்ஷியமாய்ப் போதித்து வந்தனர். இதன் பிரகாரம், உலக மக்களில் பெரும்பாலோர் நடந்து வந்ததால், அமைதியான வாழ்வு வாழ்ந்து வந்தார்கள்.

இன்றைய நிலைமை என்ன? மேற்கே உள்ள ஒருநாடு, கிழக்கே உள்ள ஒரு நாட்டை முறைத்துப் பார்க்கிறது. மேலை நாட்டை கீழை நாடு சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறது. ஒரு வல்லரசு, தன்னிடம் பயங்கரமான அணுசக்தி ஆயுதங்களை தயார் செய்து வைத்துப் பிறநாட்டை மிரட்டி "சமாதானமாய் வாழலாம் வா" என்று அழைக்கிறது. இந்தப் பிறநாடும், அதைவிட மிகப் பயங்கரமான ஆயுதத்தை அதிகம் சேமித்து வைத்துக் கொண்டு "நீ எனக்குப் பணிந்து வா, சமாதானமாக வாழலாம்" என்று கொக்கரித்து அழைக்கிறது. இவ்வாறே, ஒவ்வொரு பெரிய நாடும் சிறிய நாட்டை, அச்சுறுத்தியோ ஆசை காட்டியோ "சமாதானமாய் வாழலாம், வா" என்று அழைக்கிறது.

இக்காலத்தில் எந்த அரசாங்கத்தினிடமும் மனத்தூய்மையில்லை, ஒழுக்க சீலம் இல்லை, நேர்மை இல்லை, நியாயம் இல்லை. ஆனால் ஒன்றையொன்று சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றன; அல்லது பொறாமை திருஷ்டியோடு நோக்குகின்றன; அல்லது அந்த நாட்டிடமுள்ள செல்வங்களைக் கவர்ந்து கொள்ளையடித்துக் கொண்டு வந்துவிடலாம் என்ற சுயநலக் கருத்தோடே பழகுகின்றன. "என்னை இப்படி நீ ஏமாற்றுகிறாயா? உன்னை நான் எப்படி ஏமாற்றுகிறேன், பார்" என்று சவால் விடுப்பதேபோல் நடந்து கொள்கின்றன.

இன்னொரு பக்கம்: உயர்வு, தாழ்வு காட்டப்படுகின்றன; வெள்ளைத் தோலுடையவர்கள் "நாங்களே உயர்ந்த ஜாதி, நாங்களே ஆளப் பிறந்திருக்கிறோம்" என்று தற்பெருமை காட்டிக் கொள்கின்றனர். இன்னொரு பக்கம், கீழ் நாட்டார், மேல் நாட்டாரை நோக்கி, "நாங்கள், ஆத்ம ஞானம் உடையவர்கள்; நாகரிகமாய் வாழத் தெரிந்தவர்கள்; புராதன கால சம்பிரதாய முடையவர்கள்; ஆகவே, உலகில் நாங்களே சிறந்த ஜாதியினர்" என்று சொல்லிக் கொள்கின்றனர்.

ஆனால் தீனுல் இஸ்லாம் என்னும் சுத்த சத்திய சன்மார்க்கமோ, இத்தகைய தோல் நிறத்தாலோ, புராதனப் பெருமையாலோ, செல்வக் கொழிப்பாலோ, சரீர பலத்தாலோ யாரும் எவரும் உயர்ந்தவனாக மாட்டான், உத்தமனாகிவிட மாட்டான், சீரிய லக்ஷியவாதியாய் விட மாட்டான் என்று தீர்ப்புக் கூறுகிறது. எவன் தெய்வத்துக்கு பயந்து, நற்குண நல்லொழுக்கத்திற் சிறந்து, எல்லோர்க்கும் நன்மை புரிந்து நல்லவனாகத் தோன்றுவானோ அவனே உயர்ந்தவன்—நல்லவன்—சிறந்தவன் என்று இஸ்லாம் வரம்பு கட்டியுள்ளது.

"உங்களில் சிறந்தவன் யாரெனின்
உங்களில் உத்தம பக்தனாய் இருப்பவனே"

என்பது, இஸ்லாத்தின் திருமறையான குர்ஆன் கூறும் அழுத்தந் திருத்தமான தீர்ப்பாகும்.

இன்னமும் இக்காலை, சிலநாடுகளில் அமைதி சமாதானம் நிலவச் செய்வதற்குப் புதுப்புது இயக்கங்களைத் தோற்றுவித்துக் கிளர்ச்சிகள் செய்து வருகிறார்கள். ஒருபக்கம் முதலாளி இயக்கமும், மற்றொரு பக்கம் தொழிலாளி இயக்கமும் "நாங்கள் தான் முக்கியம், நாங்கள் தான் வலியவர்கள்; நீங்கள் எங்களுக்குக் கட்டுப்பட்டு இருக்க வேண்டியவர்களே" என்று போட்டி யிட்டுப் பெருமை பாராட்டிக் கொள்கின்றனர்.

முதலாளிகள், பெரும் பணம் செலவிட்டு ஒரு கைத்தொழிலை ஆரம்பித்து, அதில் பல நூறு ஏழைகளை வேலைக்கு அமர்த்திக் கொண்டு, எளியோர்க்கும் ஓர் அளவு பயன் அளித்து தாமும் நன்கு பயன் அடைந்து பரஸ்பரம் வாழ விரும்புகின்றனர். தொழிலாளிகளோ, தமக்குள் பரஸ்பர ஒத்துழைப்பும் இல்லாமல், "நாங்கள் உழைக்காவிட்டால், அந்த முதலாளியின் பணப்பெட்டி நிறையுமா? அவர் கொழுத்து உல்லாச வாழ்வு வாழவா? இனி முதலாளிக்கு வழிப்படுவதில்லை; சரிசமத்துவம் வேண்டும்; எமக்கும் சுகபோகம் வேண்டும்" என்று விதண்டாவாதம் பேசி வம்புக்கு வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறார்கள்.

இங்ஙனம் தொழிலாளி—முதலாளி கட்சிப்போராட்டத்தால், இரு சாராருக்கும் கஷ்டமே உண்டாகிறது; நாட்டுக்கும் கஷ்டம் உண்டாகிறது. அமைதி சமாதானம் குலைந்து வாழ்க்கை முறையே சீர்கெட்டுப் போகிறது.

இத்தகைய போராட்டங்களுக்கும் கிளர்ச்சிகளுக்கும், இஸ்லாம் மதம் இன்றைக்கு 1400 வருஷங்களுக்கு முன்னரே பரிகாரம் கூறி விட்டது. "எல்லோரும் சேர்ந்து வாழ்வதிலேயே சிறப்பு இருக்கிறது" என்று இஸ்லாம் மதம் ஒற்றுமையைப் போதிக்கிறது. ஏழைக்குப் பணக்காரர் உதவி புரிய வேண்டும்; "உழைக்கும் கூலிக்காரனின் உடல் வியர்வை உலருவதற்கு முன் அவனது கூலியை கொடுத்து விடுங்கள்" என்று பரஸ்பர நல்லுறவைப் போதிக்கிறது இஸ்லாம். பணக்காரன் தன் சம்பாத்தியத்தில் 40-ல் ஒரு பகுதியை ஜக்காத்தின் பெயரால் ஏழை எளியோர்க்கும் நற்காரியங்களுக்கும் கொடுத்து உதவவேண்டும் என்று இஸ்லாம் மதம் கட்டளையிடுகிறது.

சோதரீர்! மேற்கூறிய விஷயங்களை யெல்லாம் சற்றே சிந்தித்துப் பாருங்கள். இன்றைய உலகப் பிரச்னை யெல்லாம் தீருவதற்கு, தீனுல் இஸ்லாம் என்னென்ன திட்டங்களையும் ஸ்கீம்களையும் வகுத்திருக்கிற தென்று ஓர்ந்துணர்ந்து பாருங்கள்.

போராட்டங்களால் பிரச்னை தீர்ந்துவிடாது. எளியவரை மிரட்டுவதால் அவன் பணிந்துவிடமாட்டான்; 'நானே சிறந்தவன்' என்று சொல்லிக் கொள்வதால் பிறருடைய நட்பை பெற்றுவிட முடியாது; ஒருவனிடமுள்ள செல்வத்தை சுரண்டிப் பறிக்கும் எண்ணத்தோடு பழகினால், அபஜயமும் விரோதமும்தான் உண்டாகும். எவரையும் எவரும் அடக்கியாள்வ தென்பது கூடாது; இது முடியவும் முடியாது.

எனவே, இன்றைய தேசப் போராட்டங்களும், அரசியல் பிரச்னைகளும், பொருளாதாரச் சிக்கல்களும், சமூக சூழல்களும், ஏழை—பணக்கார விரோதங்களும் நீங்க வேண்டுமானால், சர்வ தேசத்தாரும் சகல மக்களும், இஸ்லாத்தின் போதனைப்படி நடந்துகொள்வதே சரியான பரிகாரமாகும். இன்றைய உலகத்தை அபாயங்களி லிருந்து காப்பாற்றும் தன்மை இஸ்லாத்தின் போதனைக்கே உண்டு. வஸ்ஸலாம்.

# இஸ்லாமிய சரித்திரச் சாரம்.

## ஹிஜ்ரீ 51–லிருந்து 100–வரை.

(டி. எப் ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி)

### ஹிஜ்ரீ-94.

(1) பத்லெ இஸ்லாம் என்று பெயர் பெற்ற இஸ்லாத்தின் இணையிலா வீரரும், இந்துஸ்தானத்தின் மீது முதன் முதல் படையெடுத்தவருமான முஹம்மத் பின் காஸிம் என்ற இளைஞர், இந்தியாவில் 'முல்த்தான்' என்ற மாகாணத்தையும் பிடித்து அங்கு இஸ்லாமிய ஆட்சியை நிலை நாட்டினார். இந்தப் பிரதேசம் சிந்து மாகாணத்து ஆட்சியிலே மிகவும் உறுதியான கேந்திரமாகவும், வடதிசையில் படை பலம் மிக்க தளமாகவும் இருந்து வந்தது. இந்த ஸ்தலத்தில் தான், ஓடிப்போன சிந்து ராஜா தாஹிர் என்பானின் மகன் கோப்பீ என்பான் பதுங்கி தஞ்சம் புகுந்திருந்தான். முல்த்தான் கோட்டையும் முஸ்லிம்களால் பிடிக்கப்பட்ட பிறகு, இந்த கோப்பீ உயிர் தப்பி, ஜெய்பூர் பக்கம் ஓடிப்போனான்.

(2) இவ்வாண்டு, இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களுடைய பிள்ளையாகிய இமாம் அலி என்பார், தமது 57ம் வயதில் இறந்து போய் விட்டார்.

### ஹிஜ்ரீ-95..

(1) பனு அப்பாஸிய்யா வம்சத்தினரில், இரண்டாவது கலீபாவாக இஸ்லாமிய அரசாட்சி நடத்திய மன்ஸூர் அபூஜஃபர் என்பார், இவ்வாண்டில் தான் பிறந்தார். இன்னவர் வளர்ந்து பிறகு ஹிஜ்ரீ 136-ல் கிலாபத் பதவியில் அமர்ந்தவராவர்.

(2) ஹஜ்றத் இமாம் ஹுஸைனின் மற்றொரு பிள்ளையாகிய ஹஜ்றத் இமாம் ஜைனுல் ஆபிதீன் (ரலி) அவர்கள், இவ்வாண்டு இறந்து போய் விட்டார்கள்.

(3) இஸ்லாமிய வீரர்களில் பெயர் பெற்ற ஹஜ்ஜாஜ் பின் யூஸுப் ஸக்பீ அவர்களும், இவ்வாண்டே கூபா என்ற இடத்தில் இறந்து போனார்கள். அந்த சமயத்தில் தான், முஹம்மத் பின் காஸிம் என்ற வீரர், இந்தியாவில் கன்னூஜ் பக்கம் படை நடத்திச் சென்று முன்னேறிக் கொண்டிருந்தார். அதே சமயத்தில் தான் இவருக்கு ஹஜ்ஜாஜ் பின் யூஸுபுடைய மரணச் செய்தி கிடைத்தது.

### ஹிஜ்ரீ-96.

(1) வலீத் பின் அப்துல் மலிக் என்ற பெயருடைய கலீபா, இவ்வாண்டு இறந்து போய் விட்டார். இவரது மரணத்தை யடுத்து,

இவரது சகோதரர் ஸுலைமான் என்பார், பனி உமய்யாக்களின் 7-வது கலீபாவாக அமர்ந்து, இஸ்லாத்தின் பெயரால் ஆட்சிபாரம் செலுத்தலானார்.

(2) ஸஹாபி அப்துர் றஹ்மான் பின் அவுப் (ரலி) அவர்களுடைய புதல்வரான இப்ராஹீம் என்பார், இவ்வாண்டு தமது 75-ம் வயதில் இறந்து போனார்.

## ஹிஜ்ரீ-97.

இவ்வாண்டு சில அசம்பாவிதங்கள் நிகழ்ந்து விட்டன. அதாவது ஸுலைமான் பின் அப்துல் மலிக் என்பார், ஹஜ்ஜாஜ் பின் யூஸுப் மீதும் அவரது குடும்பத்தார் மீதும் விரோதம் கொண்டு, தான் தோன்றித்தனமாக நடந்து கொள்ளலானார்; முதலாவதாக, வீரத் தளபதியான கத்பிய்யா என்பவரைக் கொன்று போட்டுவிட்டார். இதே பிரகாரம் அநீதமாய் சிந்து பிரதேசத்தில் கிலாபத் பிரதிநிதியாய் (கவர்னராய்) அரசியல் நடத்திக் கொண்டிருந்த முஹம்மத் பின் காஸிம் என்ற இஸ்லாமிய வீரரை, அப்பதவியி லிருந்து விலக்கி விட்டார்; மேலும் அவரது ஸ்தானத்தில் ஒன்றுக்கும் உதவாத யஜீத் பின் அபீ கைஷியா என்பானை (கவர்னராக) நியமித்து விட்டார். அது மட்டுமல்ல; படை அனுப்பி முஹம்மத் பின் காஸிமை கைது செய்து இராக்குக்கு அனுப்பி வைத்தார். ஸுலைமானால் கைது செய்யப்பட்டு கடும் சிறை வாசம் அனுபவித்து வந்த முஹம்மத் பின் காசிம், சுத்த வீரத் தியாகியாய் அச்சிறையிலே உயிர் நீத்து இறந்து போனார். அந்தோ!

## ஹிஜ்ரீ-98.

இவ்வாண்டும் ஸுலைமானுடைய கொடுமைகள் தாண்டவமாடின. அந்துலுஸ் என்ற நாட்டில் ஓர் அதிகாரியாய் இருந்து வந்த மூஸா பின் நஸீர் என்பார், ஸுலைமானுடைய தூண்டுதலின் பேரில், சில மூர்க்கர்களால் கொல்லப்பட்டுப் போனார்.

(2) இவ்வாண்டு, ஹஜ்ரத் கைஸ் பின் அபீ ஹாஸிம் (ரஹ்மதுல்லாஹி அலைஹி) என்ற பெரியார் இறந்து போய் விட்டார்கள். இப்பெரியார் ஸஹாபிகளுக்கு அடுத்தபடியான 'தாபிஈன்' களில் மிகவும் சிறப்புப் பொருந்தியவர்களாவர்.

## ஹிஜ்ரீ-99.

(1) கலீபா என்ற பெயரால் எதேச்சாதிகார அதிக்ரம ஆட்சி புரிந்துவந்த ஸுலைமான் பின் அப்துல் மலிக், இரண்டு வருஷம் எட்டு மாதங்கள் மட்டும் கிலாபத்தை நடத்திக் கெட்டபெயர் சம்பாதித்துக் கொண்டபின், தமது 39-ம் வயதில், இவ்வாண்டு ஸபர் மாதம் 10-ம் நாள் வெள்ளிக்கிழமை யன்று இறந்துபோய் விட்டார்.

(2) மாண்டு மறைந்துபோன ஸுலைமானுக்குப் பிறகு அவரது சிறிய தகப்பனாரின் புத்திரர் (தம்பி) உமர் பின் அப்துல் அஜீஸ் என்ற உத்தமர், கலீபாவாக அமர்ந்து கிலாபத் ஆட்சி பீடத்தை அலங்கரித்தார். இவரே, 'உத்தமர் உமர்' என்றும், 'இரண்டாவது உமர்' என்றும் பெயர் பெற்றவராவார். மேலும், இவ்வுத்தமர் பனீ உமய்யா வம்சத்தினரில் 8-வது கலீபாவாக இஸ்லாமிய குடியரசாட்சி நடத்திய சீலராவர்.

(3) இவ்வாண்டு, ஹஜ்ரத் ஸுப்யான் ஸவ்ரி என்ற இஸ்லாமியப் பெரியார் பிறந்த ஆண்டாகும்.

## ஹிஜ்ரீ-100

(1) அரபு முஸ்லிம் வீரர்கள், இவ்வாண்டு தளபதி அல்ஹார் பின் அப்துர் ரஹ்மானுடைய தலைமையில் பிரான்ஸ் நாட்டு மீது, இஸ்லாத்தின் பெயரால் படை யெடுத்துச் சென்றார்கள். இம்முயற்சியில் வெற்றியும் பெற்றனர்; தெற்குப் பிரெஞ்சுப் பிரதேசங்களில் அநேக பகுதிகளைப் பிடித்து இஸ்லாமியப் பிறைக் கொடியை நாட்டினார்கள்.

(2) இவ்வாண்டு, ஹஜரத் காரிஜா பின் ஜைத்பின் ஸாபித் (ரஹ்) என்ற அன்ஸாரி, மதீனமா நகரில் இறந்துபோய் விட்டார்கள்.

(3) ஹஜ்ரத் அபூ அமாத்தல் அன்ஸாரி (ரஹ்) என்ற பெரியார் இவ்வாண்டு, தமது 92-ம் வயதில் இறந்து போனார்கள்.

(4) ஹஜ்ரத் முஜாஹித் பின் ஜமீர் (ரஹ்) என்ற பெரியார், இவ்வாண்டு இறந்துபோனார்கள். இப்பெரியாரே, மக்கமா நகரில் பண்டைப் போது 'குராஃ' வாகவும் சஹாபாக்களின் தலைவராகவும் நியமனம் பெற்றிருந்த சன்மார்க்க கல்விமானவர்.


# இங்லீஷ் குர்ஆன்

திருக் குர்ஆனின் இங்லீஷ் மொழி பெயர்ப்பு; முஹம்மது மர்மடூக்பிக்தால் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது: 464-பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 3—0—0

ஷை குர்ஆன் அறபியும் சேர்த்தது 2 பாகங்கள் விலை ரூ. 15—0—0

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

அரைவிலை !                    அரைவிலை

# மனயிஹுல் அன்வார் பீ
# மதாயிஹுர் ரஸூல் வல் அப்ரார். !!

இந்த கிதாபில், நமது நாட்டில் வழமையாய் ஓதி வருகிற ஸுபுஹான மௌலிது, பர்ஸஞ்சி மௌலிது, ஹஸன் (ரலி) ஹுஸைன் (ரலி) மௌலிது, முஹியித்தீன் (ரலி) மௌலிது, ஷாஹுல் ஹமீது (ரலி) மௌலிது ஆக ஐந்து மௌலிதுகளும், யாஸைய்யிதி, யாகுத்பா, யாஸைய்யிதி ஷைகி, ஷபீஹுக பைத்து, கலாஸீ பைத்து, மழை பைத்து, பீஹுப்பி (ஸலவாத்து) பைத்து, கஸீதத்து ஹுஸைனிய்யா, அயாரப்பி பைத்து, ஜுத்பிலுத்பிக முனாஜாத்து, ஜிந்தா ஷாஹ் நூரிய்யா பைத்து, அபுல் ஹஸனிஷ் ஷாதிலீ (றழ்) குத்பிய்யா, காஜா முயீனுத்தீன் (ரலி) பர்திய்யா, யாமன் யரா பைத்து, கல்வத்து நாயகம் பேரில் கஸீதா முதலியவையும் அடங்கியுள்ளன. இது பெரிய எழுத்தில் எழுதி, போட்டோ பிளாக் செய்து, கிளேஸ் காகிதத்தில் சுத்தமாய் அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

விலை ரூ. 6—0—0

ஷை கிதாபு ஒரே நேரத்தில் 6 வாங்கினால் அரைவிலையாக கொடுக்கப்படும். அதாவது ரூபா. 18–0–0க்கு 6 கிதாபுகள் கொடுக்கப்படும். இந்த சலுகை சொர்ப்ப காலத்திற்கே இருக்கும். இந்த சலுகை எவ்வித முன் அறிவிப்பும் இல்லாமல் நிறுத்தப்படக்கூடும்.

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# ஷாபிஈ மத்ஹபின் சிறப்புக்கள்.

(டி. எப். ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி)

## 3-வது பகுதி.

### இமாமின் இதர நூல்கள்.

இப்னு தவ்க் என்னும் பேரறிஞர், இமாம் முஹம்மத் ஷாபிஈ (றஹ்) அவர்களைப் புகழ்ந்து தமது நூலில் விளக்கமாய் எழுதியுள்ளார்கள். இமாம் ஷாபிஈ (றஹ்) பெரும் பெரும் நூல்களாக பதினன்கு இயற்றி யிருப்பதாகக் கூறுகிருர்கள். சிறு சிறு நூல்களோ நூற்றுக்கு மேல் இருக்கின்றன வென்றும் கூறுகிருர்கள்.

சுருங்கக் கூறுமிடத்து, இமாம் முஹம்மத் ஷாபிஈ (றஹ்) அவர்கள், தீனுடைய தப்லீகுக்காகவும் இஸ்லாமிய இல்முடைய அபிவிருத்திக்காகவும், தம்முடைய வாழ்நாள் முழுதும் பெரும் சேவை செய்துள்ளார்கள். படிப்பது, போதிப்பது, சிந்திப்பது, எழுதிக் குவிப்பது இவற்றைத் தவிர்த்து, இமாம் ஷாபி (றஹ்) அவர்கள் தமது ஜீவியத்தில் வேறு இன்பங்களைக் கண்டார்களில்லை.

### அஸ்மயீ போற்றிய இமாம்.

இஸ்லாமிய உயர்தர கல்வி (இல்மு) கற்ற ஆலிம் உலமாக்கள் ஹஜ்ரத் அஸ்மயீ எத்தகைய மகாப் பெரும் மேதாவி என்பதை அறிவர். இப்பெரியார், நம் இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்களுடைய சமுகத்தை அணுகி, "ஹிதாயிய்யீன்" என்னும் அரபு காவிய நூலை, ஒழுங்குடன் கற்றுக் கொண்டார்கள். அஸ்மயீ எப்படிப் பட்டவர் என்பதை சிறிது கூறினல் தான், இமாம் ஷாபிஈயின் சிறப்பு எத்தகையது என்பது வெளியாகும்.

'அஸ்மயீ' என்பவர் யார்? இப்பெரியார் பஸ்ரா நகர் வாசி. ஹிஜ்ரி 123-ம் வருஷம் பிறந்தவர். ஹி. 217-ல் இறந்தவர். பஸ்ரா நகரிலே கல்லடக்கமும் செய்யப்பட்டவர். நீண்ட நாள் ஆயுளோடு இருந்து கல்வித் துறையில் பெருஞ் சேவை செய்தவர் இவர். ஹஜ்ரத் அஸ்மயீ 88 வயது ஜீவித்திருந்தார் என்று கத்தீப் பக்தாதீ என்ற அறிஞர் எழுதி யிருக்கிறுர்.

பெரியார் அஸ்மயீ, வம்சத்திலும் சிறந்தவர். அபூஸயீது அப்துல் மலிக் என்பது இயற்பெயர். அஸ்மயில் பாஹிலி என்பது

மூற்பாட்டனர் பெயர். இதைக் கொண்டே இவருக்கு அஸ்மயீ என்று பட்டம் வந்தது. அஸ்மயீ அவர்கள், லுகத் என்னும் அரபு அகராதிக் கலையிலும், நஹ்வு என்னும் அரபு இலக்கணக் கலையிலும் மிகவும் தேர்ந்த இமாமாக இருந்தார்கள். பழைய வரலாறுகள், ஆச்சரிய—விநோதச் செய்திகளை விளக்கிச் சொல்வதில் நிகரற்றவரா யிருந்தார்கள்.

## இமாம் ஷாபியீயின் ஹதீது ஆராய்ச்சி.

இமாம் முஹம்மத் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், குர்ஆனுடையவும் ஹதீதுடையவும் கட்டளைகளை யொட்டி மஸ்அலா உண்டாக்குவதற்காக, ஹதீதுகளைப் பெரிதும் துருவி ஆராய்ந்தார்கள். இத்தொண்டினைக் கருதி, பழங்காலத் தொடர்புடைய பெரியோர்கள் பலரை சந்தித்துப் பாடம் கேட்டுள்ளார்கள். அத்தகையவர்களில் (1) ஷூஃபத் இப்னுல் மஜாஹ், (2) ஹிமா நியின், (3) மஸ்அரீன் ஆகியவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

அபுல் பஜ்லுல் ரப்பாஷி என்ற அறிஞர், பக்தாதில் இஸ்லாமிய ஜனநாயக (கிலாபத்) ஆட்சி நடத்திக் கொண்டிருந்த கலீபா ஹாரூனுர் ரஷீத் காலத்தில் இல்மு கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தவராவர். இப்பெரியார், நம் இமாம் முஹம்மத் ஷாபிஈ (றஹ்) இடம் ஹதீதுக் கல்வி பயின்றுள்ளார். இதே விதமாய், அபூஉபைதா காஸிம், அபூஹாத்தில் ஸஜ்தானி ஆகியோரும் நம் இமாமிடம் கல்வி கேள்வி பெற்றவர்களேயாவர்.

ஹஜ்ரத் அஸ்மயீ, கிதாபு, தப்ஸீர், ஹதீதுக் கல்வி ஆராய்ச்சியில் தேர்ச்சிப் பெற்றவரா யிருந்தார் என்பது வெளிப்படை. அப்படிப் பட்டவரே, நம் இமாம் ஷாபிஈயிடம் அடிக்கடி வந்து கேட்டுணர்ந்து தம் சந்தேகங்களை நிவர்த்தித்துக் கொண்டு போகிறவரா யிருந்து வந்தார். இதனாலும் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களின் மகிமை நன்கு விளக்கமாகின்றது.

## ஹன்பலி இமாமின் சாட்சியம்

இஸ்லாமிய ஸுன்னத்து வல்ஜமாஅத்தின் பிரிவுகள் என்று உலகோரால் ஒப்புக் கொள்ளப்பட்டவை நான்கு மதுஹபுகள். அவை ஹனபி, ஷாபிஈ, மாலிக்கி, ஹன்பலி ஆகியவைகளாகும். ஹன்பலி மதுஹபின் போதகராகிய இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (றஹ்) அவர்களும் நம் ஷாபிஈ இமாம் முஹம்மத் (ரஹ்) அவர்களிடம் சிஷ்யராக சேவை செய்து, அறிவுப் பயிற்சி பெற்றுக் கொண்டுள்ளார்கள். இமாம் ஹன்பலி கூறுவதாவது :—

"நான், ஹதீதுகளில் எது 'நாஸிக்' எது 'மன்ஸூக்' என்று சுயமே ஆராய்ந்தறிய முடியாதவனா யிருந்து வந்தேன். 'காஸ்' என்பதென்ன? 'ஆம்' என்பதென்ன? 'முஜ்மல்' என்பதென்ன? 'முபஸ்ஸல்'

என்பதென்ன? என்ற விபரங்கள் கூட எனக்கு செவ்வனே தெரியாம லிருந்தன. இதை யெல்லாம் நான், இமாம் முஹம்மத் ஷாபிஈ (றஹ்) அவர்களிடம், உத்தியோகம் புரிந்த பாக்கியத்தைக் கொண்டே தெரிந்து கொண்டேன்'' என்பதாகும்

காஸிம் பின் ஸலாம் என்ற பெரியாரும் இவ்வாறே சாக்ஷியம் கூறுகிறார்கள். அதாவது :—''நான் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்க ளுடைய சமுகத்தில் அமர்ந்து பல விஷயங்களைப் படித்தறிந்து கொண்டுள்ளேன். எனவே, இமாம் ஷாபிஈயை விட மகா அறிவா ளியை—காமிலான வரை நான் கண்டறியவில்லை. இமாம் ஷாபிஈ (ரஹ்) படிப்பிலும், பெருந்தன்மையிலும் பரிபூரணத் தன்மையிலும் மகிமையிலும் மிகவும் சிறந்தவராய் இருந்தார்கள். காமில்களில் அவர்கள் அக்மலாக இருந்து வந்தார்கள்.

## இமாம் ஹன்பலீ (ரஹ்) புகழுரை.

ஒருமுறை ஹன்பலி மத்ஹபின் இமாமாகிய இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) அவர்களின் அருமைக் குமாரர் (ஸாஹிப் ஜாதா), தமது அருமைத் தந்தையாரை நோக்கி ''பாவா, இந்த ஷாபி இமாம் என்பவர் யார்? எப்படிப்பட்டவர்? அவருடைய நன்மைக்காக தாங்கள் எப்போதும் ஆண்டவனிடம் துஆ கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே, ஏன்? தயவு செய்து சொல்லுங்கள்'' என்று கேட்டார்.

அதற்குத் தகப்பனுர், இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) சொன்ன புகழுரையாவது:- ''அருமந்த மைந்தா! இமாம் ஷாபிஈ ஒரு பிரகாசச் சூரியனைப் போன்றவர். உலகத்துக்கெல்லாம் அறிவு என்னும் சுடர் ஒளியை பரத்திக் கொண்டிருக்கிறார். ஆரோக் கியத்தைத் தரும்படியான சூரியப் பிரகாசம் சரீர சுகத்துக்கு எங்ங னம் அத்தியாவசியமோ அங்ஙனமே இமாம் ஷாபிஈயின் விஜயம் இஸ் லாமிய உலகத்துக்கு மிகவும் அத்தியாவசியமாகும். அவர் விலையில்லா மாணிக்கம் போன்றவராவர். மகனே, அவருக்கு இணை அவரேதான்; அவர் மறைந்தால் அவருடைய ஸ்தானத்தில் அமரத் தகுதியான வர் யாரும் கிடையார். ஆகையால்தான் இத்தகைய மகிமைப் பொருந் தியவரின் க்ஷேம-ஸலாமத்துக்காக நான் துஆ கேட்பவனுக இருக் கின்றேன்; நான் இங்ஙனம் 30 வருஷகாலமாக அவருக்காக துஆவும் இஸ்திக்பாரும் செய்த பிறகே இரவில் நித்திரை புரியத் தொடங்கு வது வழக்கமாக இருந்து வருகிறேன்'' என்பதாகும்.

## யஹ்யா பின் முஈனுடைய தகவுரை.

இமாம் ஷாபிஈ (றஹ்) வுடைய மகிமையைப் பற்றியும், இமாம் அஹ்மத் பின் ஹன்பலுடைய பேணுதலைப் பற்றியும், யஹ்யா பின் முஈன் அவர்கள் கூறும் புகழுரைச் சம்பவமாவது:—

"நான் இமாம் ஹன்பல் (றஹ்) அவர்களை அடிக்கடி சந்தித்துப் பேசுவது உண்டு. அவர்கள் என்னை நோக்கி "யஹ்யாவே, இமாம் ஷாபிஈயிடம் நீர் போக வேண்டாம். அவரை அணுகவும் வேண்டாம்; அவருக்கு எவ்விதப் பணிவிடையும் புரியவேண்டாம்" என்று எனக்கு தாக்கீது செய்வார்கள்.

ஒருநாள், நான் என்ன கண்டேனென்றால், என்னை விலக்கிவந்த இமாம் அஹ்மத் பின் ஹன்பல் அவர்களே, இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்களுடைய அடிமை ஊழியர் போல் தொண்டு புரிந்து கொண்டிருந்தார்கள். அதாவது ஷாபிஈ இமாம், ஒரு கோவேறுக் கழுதை (வாகனம்) மீது அமர்ந்து ஸவாரி செய்கிறார்கள். அஹ்மத் பின் ஹன்பல் அவர்களோ, அந்த வாகனத்தின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு நடந்து, கூடவே போகிறவர்களாகவும், அந்தக் கழுதையைத் தோய்த்துக் குளிப்பாட்டும் வேலைக்காரனைப் போலும் இருந்தார்கள்.

இதைக்கண்டு நான் பேராச்சரியப்பட்டு தனிமையில் அஹமத் பின் ஹன்பலை யணுகி, "என்ன ஹஜ்ரத் இது! இமாம் ஷாபிஈயிடம் அணுகவேண்டாம்; தோஸ்தி செய்யவேண்டாம்" என்று எனக்கு இதோபதேசம் செய்துவிட்டு, அந்தப் பேரூழியத்தைத் தாங்களே புரியத் தொடங்கி விட்டீர்களே, என்ன மர்மம் இது" என்று கேட்டேன்.

அதற்கு இமாம் அஹ்மத் பின் ஹன்பல் அவர்கள் சொன்னதாவது: "நண்பரே! மகா மேதையாகிய இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுடைய திருச்சமுகத்தில் இருந்து பணிவிடை செய்யும் பாக்கியம் என்னைவிட்டு உமக்கும், வேறு யாருக்கும் போய்விடக் கூடாது என்பதற்காகவே அங்ஙனம் கூறிவருகிறேன். அவர்கள் ஏறிச்செல்லும் கழுதைக்கு ஊழியம் செய்தாலாவது, அவர்களுடைய இல்மு என்னும் கல்வியறிவின் வாடை என் மீது வீசுமல்லவா? இதுதான் மர்மம்" என்பதாகும்.

அபூ ஜக்ரிய்யா யஹ்யா பின் முஈன் அவர்களும் மகாப் பெரும் அறிவாளியாவர். பணக்காரரின் புத்திரர். தன் செல்வத்தை யெல்லாம் தீனுக்காக செலவு செய்து விட்டு, இல்மு கற்கும் விஷயத்தில் இமாம் ஷாபிஈயிடம் பணிவிடை செய்யும் பாக்கியம் பெற்றவராவர்.

(தொடரும்)

# * வணங்குவது எதை? *

எஸ். எம். முஹம்மது முஸ்தபா. (திருவிதாங்கோடு)

*அன்புடைய சகோதரீர்!*

அகில உலகில் பரந்து கிடக்கும் மா பொருட்களனைத்தும் இறையோனுகிய அல்லாஹ்வுக்கே சொந்தமானவையாகும். உலகைப் படைத்த கருணாநிதியாகிய இறைவன் உலகில் அமைத்துள்ள ஒவ்வொரு பொருட்களின் மீதும் ஒவ்வொரு வகையான உதாரணங்களையும் பற்பல சிந்தனை நிரம்பிய கருத்துகளையும் அதில் அமைத்து வைத்திருக்கிறான். இப்படிப்பட்ட கருத்துகள் நிரம்பிய பொருட்களாகிறது கண்ணாடி அதன் உட்பொருள்களை காண்பிப்பதுபோல உலகில் அடங்கியிருக்கும் ஒவ்வொரு பொருள்களும் தன் தன் ஆராய்ச்சியான உதாரணங்களைக் கற்சிற்பிபோல் விவரித்து ஆழ்ந்த கருத்துகளை அடக்கிக் காண்பிக்கின்றன. இப்படிப்பட்ட பொருள்களை மனிதன் தத்தம் சிந்தனைக்குத் தக்கவாறு ஆராய்ந்து பார்ப்பது கடமையாகும்.

மனிதனுகிறவன் தன் ஆராய்ச்சியின் விளைவால் ஓர் புனிதமான நல்ல கருத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். ஓர், உள்ள பொருளை எடுத்து அதன் ஆராய்ச்சியில் நாம் புகுவோமாகில் ஆரம்பத்தில் இது உயிருள்ளதா யிருக்கின்றது. இப்படிப்பட்ட உயிருள்ள ஒன்றைப் படைக்க வேண்டுமாகில் இதைவிட ஓர் பெரிய சக்தியுள்ள ஒன்றுதான் படைத்திருக்க வேண்டும். ,மனிதனுகிறவன் எல்லாவற்றைவிட சக்தியுள்ளவனு யிருக்கிறான். பரந்த உலகைச் சுற்றுகிறான்; விரிந்த ஆகாயத்தில் பறக்கிறான்; குளிரும் நீரில் மூழ்கிச் செல்கின்றான்; ஆராய முடியாதவைகளை ஆராய்கிறான்; தன்னுல் இயன்றவரைப் பார்க்கிறான்; இயலாவைகளை பிற பொருட்களின்மீது ஆதிக்கம் செலுத்தி அவைகளை இயங்கச் செய்கிறான். கண்டுகொள்ளா மலை உச்சிகளை கண்டுகொள்கிறான். அடக்கமுடியா விலங்குகளை அடக்கி விடுகிறான். இதுமட்டுமல்ல! இதுபோன்ற எண்ணற்ற பொருட்களின்மீது ஆதிக்கம் செலுத்துகிறான். இப்படிப்பட்ட மனிதன் எல்லா வஸ்துக்களைக் காட்டிலும் மேலானவனு யிருக்கிறான். இதற்கு எந்த விதமான சந்தேகங்களுமில்லை; இதற்கு மார்க்கத்தின் பற்பல உன்னத ஏடுகளின் மூலமாய் பல சான்றுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இப்படிப் பட்ட மனிதன் கல், தீ, விக்கிரஹம், மரம், சுவர் இவைகள்போன்ற தனக்கு கீழான வஸ்துக்களை வணங்குவது நல்லதா? கூடாது. அப்படி வணங்குவது தவறு யெனக் கூறுவதில் யாதொரு ஐயத்திற்கும் இடம் உண்டாகா.

இவைகளைப்பற்றியே பற்பல நபிமார்களும் தத்தம் காலங்களில் அவைகளை விட்டுவிடும்படி ஏவினார்கள். மனிதனை ஓர் வஸ்து அவனைப் படைக்க வேண்டுமாயின் அவ்வஸ்து அவனைவிட எவ்வளவோ பெரிய சக்தியுள்ளதா யிருத்தல் வேண்டும். பற்பல ஆராய்ச்சியின் மூலமாய் ஆராய்ந்தால் சூரியன் எவ்வளவோ லட்சக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கின்றது. என்றாலும் அது பெரியது தான்; ஆனால் அது மறைகிறது; எனினும் அதைப் படைத்ததும் ஓர் மா! கோசக்தியுள்ளதா யிருக்க வேண்டும். அந்த வஸ்துவுக்குத் தான் தன்னால் இயங்கும் சக்தியுண்டு; அந்த ஒன்றுதான் எல்லாவற்றையும் படைத்தது; அதற்குத்தான் பிரிதொன்றை உண்டாக்கச் சக்தியுண்டு என்பது ஒவ்வொருவரும் அறிய வேண்டிய முக்கிய கடமையாகும். இதைத்தான் உலகில் தோன்றிய மெஞ்ஞானிகள் எல்லோரும் தானும் கடந்து பிறருக்கும் அறிவித்தார்கள். இந்த சக்திக்கு எல்லாவற்றின் மீதும் இறை என்னும் ஆணையிடும் சக்தியுண்டு. இப்படி ஆணையிட்டு ஆளுகின்ற சக்தியுடையோனுக்குத்தான் அரபிப் பதத்தில் "அல்லாஹ்" வெனக் கூறுவது. இப்படிப்பட்ட அல்லாஹ்வின்மீது நம்பிக்கை வைப்பது அவசியமா யிருக்கின்றது. இவ்விதமான நன்னம்பிக்கையைத்தான் முதலில் இஸ்லாம் வேண்டுவது. மனிதன் தான் வணங்குவது மண்ணல்ல, மரமல்ல, தீயல்ல, சூரியனல்ல; எல்லாவற்றையும் படைத்துக் காக்கும் இறைவனின்மீது நம்பிக்கை கொண்டு வணங்குவதா யிருக்கும். இதற்குத்தான் அரபியில் ஈமானெனக் கூறுவது. இந்த ஈமானுகிறது "லாயிலாஹ இல்லல்லாஹு......" என்பதாகும். "வணங்க தெய்வமில்லை அல்லாஹ்வைத் தவிர" என்று ஒழுகுவதாகும்.

---

தக்கலை பீர் முஹம்மது ஒலியுல்லா
அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

**ஞானக் கோர்வை**

இதில் மேற்படி ஒலி நாயகமவர்கள் அருளிய பிஸ்மில் குறம், ஞானப்பால், ஞானப்பூட்டு, ஞானப் புகழ்ச்சி, ஞான மணிமாலை, ஞானக்குறம், ஞானரத்தின குறவஞ்சி, ஞான ஆனந்தக்களிப்பு, திரு மெஞ்ஞான சரநூல், ஞான முச்சுடர்ப் பதிகம் முதலியன அடங்கி யிருக்கின்றன.

கலிகோ பைண்டு விலை ரூ. 3—12—0

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

தப்லீக் ஜமாஅத்தை பற்றி வேலூர் முப்தியின் தீர்ப்புக்கு

# தேவ்பந்த் "தாருல் உலூம்" அளிக்கும் தீர்ப்பு.

மொழி பெயர்ப்பு :—'மாஸ்டர் கமால் பாபு'

## முன்னுரை

கடவுளுக்காக செய்து வரும் கற்கோட்டை மீது
கணக்கற்ற கற்பனை கற்கள் வீசினாலும்
கண்ணாடி இல்லையது உடைந்திடவேயென
"கமால்" நீ கயவர்களுக்கு எடுத்துரைப்பாயே.

சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் வட நாட்டில் உதயமான "தப்லீக் பிரசாரம்" நாளடைவில் நாடெங்கும் பரவி கடந்த ஐந்தாறு வருடங்களாக தமிழ் நாட்டிலும் வெற்றி முரசோடு பவனி வந்து கொண்டிருப்பது உலகமறிந்த விஷயம். இப்புனிதமான பிரசாரத்தில் பாமரமக்கள் மட்டுமின்றி அரிய பெரிய மௌல்விகளும் பரவசத்துடனே கலந்து பணியாற்றி வருவதைக் கண்கூடா காட்சியாகக் கண்டு வருகிறோம். அண்டை நாடான சிலோனில் 'இத்தப்லீக் ஜமாஅத்' செய்துள்ள மகத்தான சேவையை இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பின் இஸ்லாமிய நிகழ்ச்சியில் கேட்டு யாம் மகிழ்ந்ததுமுண்டு. மானில முஸ்லிம்கள் நலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு சென்ற இடமெல்லாம் சிறப்போடு சேவை செய்து வரும் இத்தப்லீக் பிரசாரத்தை குறை கூறி-இல்லை-கூடாதென்று வேலூர் முப்தியான "ஷேக் ஆதம் சாயபு" அண்மையில் ஒரு தீர்ப்பை வெளியிட்டார். இதை ஆட்சேபித்து பாரிலே தேவ்பந்த் மௌலான மௌல்வீ ஹாபிஸ் "அப்துஸ் ஸமத் சாயபு ஹாஷிமி" ஒரு எதிரொலியை வெளியிட்டார்கள். இரு மேதாவிகளும் மார்க்க அறிஞர்களானதால் எவருடைய கூற்று சரியானது என விளங்காமல் முஸ்லிம்களிடையே குழப்பமேற்பட்டு விட்டபடியால் இரு மௌல்விகளின் கூற்றையும் புகழ்பெற்ற நம்பத்தக்க மார்க்க மன்றங்களுக் கனுப்பி எவருடைய கூற்று சரியானது என்று வினவினார்கள். எல்லாம் மார்க்க மன்றங்களும் ஏகமனதாக, ஆதம் சாயபு கூற்றை ஆட்சேபித்தும் மௌலானா ஹாஷிமி அவர்களின் கூற்றை ஆமோதித்தும் தீர்ப்பு அளித்தார்கள். அவையாவும் உர்து பாஷையில் பிரசுரித்து வினி

யோகம் செய்யப்பட்டு விட்டது. அம்மன்றங்களில் ஒன்ருன 'தாருல் உலூம் தேவ்பந்த்' மன்றத்தில் இரு நபர்கள் கேள்வி கேட்டதால் இருவருக்கும் பதில் பகர்ந்துள்ளது. முதல் நபருக்கு அளித்த விரிவான விமர்சன பதில் 'இன்ஷா அல்லா' பின் பிரசுரமாகும். ஷெ மன்றத்தின் இரண்டாவது பதிலே இப்படைப்பின் தமிழ் மொழி பெயர்ப்பு. சன்மார்க்க சமுதாய நலத்தை கருதி நீதியை நிலை நாட்ட இதை பிரசுரிக்கும் "பத்ஹுல் இஸ்லாம் ஆசிரியர்" அவர்களுக்கு எம்மனப் பூர்வமான நன்றி.

இங்ஙனம்
மாஸ்டர் கமால்பாபு.

"வினு"

கீழ் காணும் விஷயங்களில் மார்க்க தீர்ப்பாளர் என்ன சொல்லுகிருர்கள்? ஹஸரத் மௌலான முஹம்மத் இல்யாஸ் சாயபு (றஹ்) அவர்களால் புத்துயிர் அளிக்கப்பட்ட "தப்லீக்" வேலையில் கடந்த முப்பது முப்பத்தைந்து வருடங்களாக இந்தியா பாக்கிஸ்தான் மட்டுமல்லாமல் ஹிஜாஸே முகத்தஸ், அமெரிக்க, இந்தோனேசியா முதலிய நாடுகளில் உலமாக்கள் மார்க்க வாதிகள், பொது மக்கள் யாவரும் ஈடுபட்டு தன் மறுமை வாழ்க்கைக்கு மோட்சமளிக்கக் கூடிய அரிய பெரிய பணி என கருதி போற்றி வருகிருர்கள். இவ்வேலையை தன் ஜீவிய கடமையாக கருதுகிருர்கள். ஆனுல் இதற்கு நேர்மாருக வேலூர் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் கல்லூரியின் முப்தி 'ஹஜரத் ஷேக் ஆதம் சாயபு' தன் தீர்ப்புரையில் இம்மார்க்கப்பணி விலக்கப்பட்டதென கூறுகிருர். (எனவே) 'போஸ்டர்' உருவிலுள்ள வினவியரின் வினு தாளுடன் ஷெ முப்தியின் பதில் தாளும் அனுப்பப்பட்டிருக்கின்றன. சன்மார்க்க சட்ட பிரகாரம் இதற்கு விளக்கமான பதில் எழுதி தருவீராக.

(1) வேலூர் முப்தி சாயபுடைய கூற்று சரியானதா?

(2) 'தப்லீக்' பெயரால் செய்து வரும் இம்மார்க்க பணிக்கு சன்மார்க்கத்தில் ஆதாரம் இல்லையா? இல்லை யெனில், மார்க்கக் கடமை என கருதி இவ்வளவு பெரிய ஆலிம்கள் எல்லாம் செய்து வருகிருர்களே அவர்க ளெல்லாம் தவருன வழியிலே இருக்கிருர்களா?

(3) சமயம் ஷெ முப்தியின் கூற்று தவருனதாக இருந்தால் அவரை முப்தி (தீர்ப்பாளர்) என்று சொல்லத் தகுமா? அவருடைய இந்த தவருன தீர்ப்பை முன்னிட்டு 'தவ்பா' செய்ய வேண்டியது அவசியமல்லவா?

வினவியவர்—முஹம்மத் மூஸா கான்
பெங்களூர் சிடி.

"விடை"

(1) விளம்பரதாளில் வேலூர் முப்தி ஆதம் சாயபு உடைய பதிலைப் பார்த்தோம். அதில் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் கல்லூரி பேராசிரியர்களின் கை எழுத்தும் இருக்கின்றது. பதில் நீளமாக இருந்தும் ஆதாரங்களில்லை. 'பிக்ஹு' களின் அத்தாட்சியுமில்லை. மேலும், தவறுகள் அதிகமாக இருக்கின்றன. அவை, அவரின் இஷ்டத்திற்கு அடிபணிந்த கற்பனைகளாகவே உள்ளன. சில வார்த்தைகள் கேள்விக்கு சம்மந்த மில்லாமலும் இருக்கின்றன. "ஷத்திரஹால்" ஹதீதை தவறாக விளக்கியுள்ளார். இது ஹதீத் விளக்குவோரின் தன்மைக்கு மாறுபட்டதாக உள்ளது. அதிலும், "ஹனபீ" மார்க்கத்திற்கு முரணாக இருக்கிறது. தப்லீக் பிரயாணத்தை விலக்கப்பட்டதாக கூறி யிருப்பது உண்மையானதல்ல. சஹாபீ (றலி)களின் தப்லீகையும் மறுக்கப்பட்டிருக்கிறது. வினவியவரின் வினாவில் குறிப்பிட்டுள்ள விஷயங்கள் (தப்லீக்) ஜமாஅத்தினால் ஏற்பட்டதென்பது உண்மை அல்ல. ஏனென்றால் அவை யாவும் ஜமாஅத்தின் சட்டத்திற்கு மாறுபட்டவை. அப்படியும் தனிநபர் ஒருவரால் கேள்வியில் குறிப்பிட்டபடி நிகழ்ந்திருந்தால் அவரை சீர்திருத்த வேண்டியது அவசியம். (ஆனால்) அதன் காரணமாக ஜமாஅத் மீதும் அதன் கொள்கை மீதும் பழி சுமத்த முடியாது. அதனால் மார்க்க பிரசாரத்தையும் விலக்க முடியாது. மக்களிடையே எம்முறையில் மார்க்க விஷயங்கள், தொழுகை, நோன்பை பரப்ப முடியுமோ பரப்ப வேண்டியது. இச்செய்கை முரணானதில்லை. இச்செயலை யாராகிலும் முரணானது என்றால் அவருடைய கூற்று உண்மையானதல்ல.

(2) சஹாபிகளின் வாழ்க்கையைக் கொண்டு திருமறையிலும் ஹதீதுகளிலும் மார்க்க பிரசாரத்திற்கு ஆதாரங்கள் உள்ளன. இதற்கு சரித்திர சாஸ்திரங்களிலும் ஹதீது கிரந்தங்களிலும் அத்தாட்சிகள் இருக்கின்றன. இது யார் மீதும் சர்வதிகாரமற்ற சன்மார்க்க சேவை. மக்கள் ஆர்வத்தோடு இதில் கலந்து கொள்வதை பார்த்து வருகிறோம். கலந்து கொள்ள (கனிவுடன்) கூப்பிடுவது வேறு விஷயம். ஆனால் யாரையும் வலியுறுத்தி கூப்பிடுவதும் வராதவர்களை சபிப்பதும் (மார்க்கத்திற்கு) முரணானது. கேள்வியில் குறிப்பிட்டபடி யாராகிலும் செய்து அத்தாட்சி இருக்குமானால் முரணானதே; அதை சீர்திருத்த வேண்டியது அவசியம். ஏனென்றால் இது ஜமாஅத்தின் சட்டத்திற்கு மாறுபட்டது.

(3) மக்களுக்கு தவறான "மஸ்அலா"க்களை காட்டுபவன் பாவியும் "முப்தி உருவிலுள்ள மூர்க்க"னுமாவான். இதில் யாருடைய பாகுபாடுமில்லை. "தான் பாவியாகி பிறரையும் பாவியாக்கினான்"

என்ற ஹதீது ஷரீபின் கூற்றுக்கு பொருத்தமாகும். இஸ்லாமிய நீதிபதி இடத்தில் இவ்வித நிகழ்ச்சிகள் ஏற்படுமாயின் அவரை கட்டு படுத்த அவரு (நீதிபதி)க்கு பூர்ண உரிமையுண்டு. தாருல் இப்தியாவிலிருந்து (ஏற்கனவே) இதற்கு பதில் எழுதப்பட்டு விட்டது. நாயன் நன்கு அறிந்தவன்.

(ஒப்பம்) அஸ்ஸயித் மஹ்தி ஹஸன் முப்தி
தாருல் உலூம் தேவ்பந்த்

## அறிமுகம்.

ஷேகுல் இஸ்லாம் ஹஜரத்து அல்லாமா மௌலானா
"ஸையத் ஹுஸேன் அஹமத் ஸாஹிப் மதனி"
அவர்கள் செய்யும் அறிமுகம்.

தாருல் இப்தியா தாருல் உலூம் தேவ்பந்தில் ஒரு நிரந்தர ஸ்தாபன மிருக்கிறது. அதன் பரிபாலர் ஜனுப் மௌலானா அல்முப்தி ஸையித் மஹ்தி ஹஸன் சாஹிபு ஒரு வயது முதிர்ந்த அனுபவசாலியும், மார்க்க அறிஞரும் உண்மையை உரைக்கும் உத்தமருமாவர்கள். தினந்தோறும் இவரிடம் முப்பது நாற்பது, ஏன்? அதற்கதிகமாகவும் வினக்கள் வந்து கொண்டே இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் அவர் பதில் கொடுக்க வேண்டியதாக இருக்கின்றது.

(ஷேகுல் இஸ்லாம் இரண்டாம் பாகம் 377-ம் பக்கம்)

நானில முஸ்லிம் நலத்தை கருதி
நீதியை எங்கும் நிலை நாட்ட
நன்மையை ஏவி தீமையை விலக்கி
நாயகம் சேவை செய்திடுவாயே
'கமால்' கவியை சன்மார்க்க முரசாய்
கொட்டடா கொட்டடா கொட்டடா—நீ ஜோராய்

# நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்.

## (இரண்டாவது பாகம்)

### அத்தியாயம் 4.

இலக்கியத்திலே இணையற்றதொரு நூலாகவும் இவ்வையத்துக்கு இனியதொரு பாதையைக் காட்டும் அருமறையாகவும் திகழும் குர்ஆன் ஷரீபைப் பற்றியும் அதனை அவனியோர்க்கு அருளிய அஹமது நபி (ஸல்) அவர்களைப் பற்றியும் தரணியிற் தலை சிறந்த தலைவர்கள் புகழ்ந்து கூறியுள்ளார்கள். அவர்களது ஆழ்ந்த கருத்துக்கள், அறிவு பொதிந்த அபிப்பிராயங்களை கீழே தருகிறோம்.

### சரித்திராசிரியர் கிப்பன்

முஹம்மது (ஸல்) அவர்களின் மார்க்கம் சர்ச்சைக்கிடமான சந்தேக விஷயங்களை விட்டும் விடுபட்டதாக விளங்குகிறது; இறைவனின் ஏகத்துவத்துக்கு கீர்த்தி வாய்ந்த அத்தாக்ஷியாக திகழ்கிறது.

### ஜெர்மன் ஆசிரியர் கெதே

அடிக்கடி அதனிடம் (குர்ஆன் ஷரீபிடம்) நாம் திரும்புகிறோம்; முதலில் அருவருப்பும் அளிக்கும் அந்த மறை விரைவில் கவர்ச்சி அளித்து, பிரமிப்பூட்டி, இறுதியில் நமது மதிப்பைச் சம்பாதிக்கிறது. அதில் பொதிந்துள்ள விஷயங்களுக்கும் அதன் நோக்கங்களுக்கும் ஏற்ப, அதன் நடை கடுமையானதாகவும் கம்பீரமானதாகவும், அழுத்தந்திருத்தமானதாகவும் உண்மையில் சாலச் சிறந்ததாகவும் திகழ்கிறது. ஆகவே, எல்லா காலங்களிலும் அந்த (வேத) கிரந்தம் மிகுந்த செல்வாக்கு வகித்துக் கொண்டிருக்கும்.

### சரித்திர வல்லுனர் சர் வில்லியம் மூர்

சர்வ வல்லமையுள்ள பிரதான அதிபதி யென இறைவனின் உள்ளமையை நிரூபித்து, மனித வர்க்கத்தினரின் கீழ்படிதலையும் நன்றி யறிதலையும் பெறும் வகையில் இறைவனின் அரசுரிமை பாத்தியதையை வலியுறுத்தும் நோக்கத்துடன் இயற்கையி லிருந்தும் இறை சித்தத்தி லிருந்தும் எடுக்கப்பெற்ற வாதங்கள் நிறைந்ததாக குர்ஆன் இருக்கிறது. மறுஉலகில் நன்மைக்கும் தீமைக்கும் சரியான சன்மானம் அல்லது தகுந்த தண்டனை உண்டென்பதையும் சன்மார்க்கத்தைப் பின்பற்றி தீய வழியை விட்டு விலகுவது கடமை யென்பதையும் சிருஷ்டிகர்த்தாவை வணங்கி வழிபடுவதில் சந்தோஷம் உண்டாகிற தென்பதையும் இன்னோரன்ன இதர விஷயங்களையும் கொண்ட-

பகுதிகள் அழகிய நடையிலும் விருப்பூட்டும் விதத்திலேயும் உண்மை காரியமாக அமைந்துள்ளன. உயிர்த் தெழுதல் உண்டென்பதை உணர்த்துவதற்காக அழுத்தந்திருத்தமான ஆதாரங்கள் காட்டப் பெற்றுள்ளன; நீண்ட காலமாக வரட்சியுற்று வாடிக்கிடந்த பூமி வானத்தி லிருந்து அபரிமிதமான மழை பொழிந்ததால் வெகு சீக்கிரம் ஜீவக்களை பெற்ற தென்ற உவமை—தெற்குப் பிரதேசங்களில் காணும் நிகழ்ச்சி—இங்கு குறிப்பிடத்தகுந்தது.

இது போன்று பதின்மூன்று நூற்றாண்டுகளாக (மனிதக் கரம் மாசுபடுத்தியிராத) பரிசுத்தமான வாசகங் கொண்ட வேறு (வேத) கிரந்தத்தை உலகில் காண முடியாது.

## ஹிக்கின்ஸ்

இயேசுவின் வேதாகமத்தைப் போல குர்ஆன் ஏழை மக்களின் நண்பனுகும். பெரிய மனிதர்களுடையவும் செல்வந்தர்களுடையவும் அநீதி ஒவ்வோர் இடத்திலும் இழித்துரைக்கப்படுகிறது. மனிதர் எவரையும் மதியாத மறை அது. அரசியல் அடிமைத் தன்மைக்கு அடிகோலும் சித்தாந்த மெதனையும் அதிலே சுட்டிக் காட்ட முடியாது.

## க்ரெஹெல்

ஒழுக்க நெறியின் பூரண தொகுப்பையும் அதன் மீது அமைந்த சட்டதிட்டங்களையும் குர்ஆன் கொண்டிருக்கிறது. நீதி பரிபாலனம், ராணுவ அமைப்பு, பொருளாதாரம் முதலிய ஒவ்வொரு துறைக்கும் அது அஸ்திவார மிடுகிறது; ஏழைகளுக்கு உகந்த சட்டங்களும் சொல்லப்பட்டுள்ளன. மனிதனது விதியைக் கரங்களிலே பற்றிப் பிடித்துள்ள ஏக இறைவனின் மீது விசுவாசத்தை இவை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

## ஜீ. டபிள்யு. லீட்னர்.

மஸ்ஜிதிலே வழிபடுவோரிடையே பரிபூரண சமத்துவம் நிலவுகிறது, எவருக்கும் தனி ஸ்தானம் கிடையாது; அந்த ஸ்தலத்தின் இமாம் அல்லது வணங்குபவரில் எவரும் (தொழுகைக்கு) தலைமை தாங்கலாம். சம்பூர்ண ஒழுங்குடனும் அமைதியுடனும் முஸ்லிம் தொழுகையாளிகள் குனிந்து, நிமிர்ந்து வணங்குவதைக் காண்பதை விட பக்திப் பரவச மூட்டும் காட்சி வேறு எதுவும் இருக்க முடியாது.

## டிக்டர்.

முஸ்லிம் சமுதாயத்திலே எங்கும் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கு மிடையே வித்தியாச, விகற்பம் காண முடியாது. முஸ்லிம் அடிமை கூட அந்த குடும்பத்திலொரு அங்கமாக இருப்பதோடு,

அரசாங்கத்திலே ஆங்கில பராதி அடைய முடியாத பெரிய பதவிக்கு உயரும் வாய்ப்பும் பெற்றிருக்கிறான்.

## கேனன் ஐஸக் டேலர்

இறைவனுடைய திருவுளச் சித்தத்துக்குக் கீழ்ப்படிவதிலும் மதுவை ஒழிப்பதிலும் தான தர்மம் புரிவதிலும் உண்மை உரைப்பதிலும் விசுவாசிகளிடையே காணும் சகோதரத்துவத்திலும் முஸ்லிம்களின் முன் மாதிரியை நாம் பின்பற்றுவது நல்லது.

## கஸ்டேவ் வெய்ல்

தமது மக்களுக்கு முஹம்மது (ஸல்) உன்னத உதாரணத்தைக் காட்டினார். அவரது குண இயல்பு பரிசுத்தமானதாகவும் மாசுமருவற்றதாகவும் இருந்தது. அவரது உறைவிடமும் உடையும் உணவும்—இவை யெல்லாவற்றிலும் அசாதாரண எளிமை காணப்பட்டது. தமது தோழர்களிட மிருந்து விசேஷ மரியாதை எதுவும் விரும்பாமலும் தாமே செய்து விடக்கூடிய காரியத்தை தமது அடிமையிடம் எதிர்ப் பார்க்காமலும் இருக்குமளவுக்கு படாடோப மின்றி அவர் இருந்தார். மளிகை சாமான்களை மார்கெட்டிலே (சர்வசாதாரணமாக) வாங்கிக்கொண்டிருந்ததையும், தமது அறையில் தமது உடைகளைத் தாமே (சர்வசாதாரணமாக) தைத்துக் கொண்டிருந்ததையும் தமது முற்றிலும் ஆட்டுப்பால் கறந்து கொண்டிருந்ததையும், அடிக்கடி காணலாம். எவரும் எந்த சமயத்திலும் அவரை அணுகலாம். நோயாளிகளை நேரில் சென்று கண்டு அனைவரிடமும் அவர் அனுதாபம் கொண்டிருந்தார். அவரது பரோபகாரமும், தாராளத்தன்மையும் எல்லையற்றது; சமுதாய க்ஷேம நலனில் அவர் காட்டிய அக்கறை அளவிடற்பாலது. எல்லா திக்குகளிலிருந்தும் அளவில்லா அன்பளிப்புகள் வந்து குவிந்தபோதிலும் அவர் விட்டுச் சென்றது அற்ப சொற்பம்தான், அதுவும் அரசாங்க சொத்தென அவர் பாவித்தார்.

## பியரே லோடி

இஸ்லாம் என்பது குருட்டு நம்பிக்கை கொண்ட மதம் என்பதும் அதனை (ஏற்றுக்கொள்வதைத்) தொடர்ந்து சமுதாயங்கள் க்ஷீணம் அடைந்து, 'முன்னேற்றம்' என்று நாம்சொல்லும் அறியாத (இலக்கு) அடைவது தடைப்படுகிறது என்பதும் நிரூபிக்கப்பெற்ற உண்மை என்று சாதாரணமாக நம்மவர்களிடையே நம்பப்படுகிறது. ஆனால் இத்தகைய மனோபாவம் தீர்க்கதரிசியின் போதனை குறித்து நமது ஆழ்ந்த அறியாமையையும் சரித்திரச் சான்று பற்றி நமது கண்மூடித்தனமான மறதியையும் காட்டுகிறது. ஆரம்ப நூற்றாண்டுகளின் இஸ்லாம், சமுதாயங்களுடன் வளர்ச்சியுற்று முன்னேற்ற மடைந்தது; பழங்கால கலீபாக்களின் ஆட்சியில் மனிதர்களுக்கு அது அளித்த உத்வேகம் சந்தேகத்துக்கிடமற்றது. முஸ்லிம் உலகின் தற்போதைய

க்ஷீணநிலைக்கு அதனை (இஸ்லாத்தை) பொறுப்பாக்குவது முற்றி லும் முரணானது. உண்மையை உரைக்க வேண்டுமானால், சமுதா யங்களுக்கு ஒரு காலம் உண்டு; கீர்த்திமிகு சிறப்புபெற்ற காலத்தைத் தொடர்ந்து அசதியும் உறக்க நிலையுமுள்ள காலம் வரும். இது இயற்கையின் நியதி. பின்னர், ஒரு சமயம் அவர்களை அபாயம் பய முறுத்தி, உறக்கத்தினின்று அவர்களைத் தட்டி யெழுப்புகிறது; அவர்கள் விழிப்புணர்ச்சி பெறுகிறார்கள். காலத்தின் அடையாளங்கள் முஸ்லிம் சமுதாயங்களின் விழிப்புணர்ச்சியைத் தெளிவாக எடுத் துரைக்கின்றன.

## மிஸிஸ் செயின்ட் க்ளேர் ஸ்டோபார்ட்

இஸ்லாம் ஆக்க வேலைக்கான அருமையான திட்டத்தை வழங் குகிறது. தினந்தோறும் அனேக தடவை ஒன்றுசேர்ந்து கூட்டாகத் தொழுகையை முஸ்லிம்கள் நிறைவேற்றும் முறை—சில விசுவாசிகள் எங்கு இருக்க நேர்ந்தாலும்—மனிதனின் ஆத்மீக சகோதரத்துவம் அடையச் செய்யும் அருமையான முறையாகும். நமக்கு முன்பு சர்வ தேச சங்கம் வைத்துள்ள இலட்சியங்களை இஸ்லாமிய ஏற்பாடான ஹஜ்—மக்கா யாத்திரை—மூலம் மிக எளிதில் அடைந்து விடலாம். ஜீவியமுள்ள இறைசித்தாந்தம் இஸ்லாத்தின் ஒப்பற்ற சாதனையாகும்.

## ஹேவ்லாக் எல்லிஸ்

(ஆண், பெண்) பால் பிரச்னையை கௌரவமாகவும் நேர்மையாக வும் நோக்கி (பரிகாரம் கூறி)ய ஒரே (மத) போதகர், இஸ்லாத்தின் தீர்க்கதரிசியாவார்.

## டியன் ஸ்டான்லி

வேதாகமத்தின் சட்டத்தொகுப்பு மூலம் கிறிஸ்தவ சமூகத்தி டையே ஏற்பட்டதைவிட குர்ஆனின் சட்டத்தொகுப்பு சந்தேகத் துக்கிடமின்றி ஆழ்ந்த கவர்ச்சியை ஏற்படுத்துகிறது.

## ரெவரண்டு ராபர்ட்ஸன்

பொறாமை, நயவஞ்சகம், வெறுப்பு, பெருமை, கர்வம், அநீதி யான தீர்ப்புகள் முதலியவற்றைக் கண்டிப்பதில் குர்ஆன் தயை தாக்ஷண்யம் காட்டவில்லை; பொறுமை, நன்றிமறவாமை, உண்மை, இறைபயம் ஆகிய நற்குணங்களை வன்மையாக வலியுறுத்துகிறது.

## லோத்ராப் ஸ்டொடார்டு

முஸ்லிம் உலகிலே இன்று மேனாடுகளைப் பின்பற்றுவது மட்டும் நிகழவில்லை; புதிய கலப்பு, கீழ்நாட்டு நோக்கங்களுடன் மேனாட்டு முறைகளைப் பொருத்துவதற்கான முயற்சியும் நடைபெறுகிறது.

(தொடரும்.)

(26-வது பகுதி)

# திருக் குர்ஆன் : : : :

# : : : : சார சங்கிரஹம்

## பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

### ஈஸா நபி 'தேவ புத்திரன்' என்பது தகாது

(கிறிஸ்துவர்கள் தங்கள் தீர்க்கதரிசியாகிய ஈஸா நபி (அலை) அவர்களை 'தேவ குமாரன்' (அல்லாஹ்வின் மகன்) என்று சொல்கிறார்கள். இதை, திருக் குர்ஆன் வன்மையாக மறுக்கின்றது :—)

இறைவன், தனக்கொரு மகனை ஏற்படுத்திக் கொள்வது, அவனது (ஏக தெய்வத்துவக்) கண்ணியத்துக்குத் தகுதியற்ற தாகும். அவன் (இத்தகைய பிள்ளை குட்டித் தொல்லைகளை விட்டும்) மிகத் தூய்மையானவன். (எல்லாம் வல்ல) இறைவன், எந்த வஸ்துவையேனும் உண்டாக்க நாடுவானாயின் "உண்டாகு" என்று சொல்கிறான்; அது உண்டாய் விடுகிறது. (இதே மாதிரி, அவ்விறைவன், ஈஸா நபியை, தந்தையில்லாமல் உண்டாவதற்குக் கட்டளையிட்டான்; அவர் பீபி மர்யமின் கர்ப்பத்தில் உற்பத்தியாய் விட்டார்; அப்படிப் பட்ட ஈஸா நபியே தம்மை 'தேவ குமாரன்' என்று ஒரு போதும் சொல்லிக் கொண்டது கிடையாது. எனினும் அவர், எப்போதும் தம்மை, 'நானொரு ஆண்டவனின் அடியானே' என்று கூறி வந்துள்ளார்.) மேலும், ஈஸா (நபி), "சந்தேகமின்றி, என்னுடைய இரக்ஷகனும் உங்களுடைய இரக்ஷகனும் ஒருவனே. அவனை மட்டும் (தொழுது) வணங்குங்கள். இதுதான் சன்மார்க்கத்துக்கு நேரான சத்திய பாதையாகும்" என்று (போதனை செய்து) கூறலானார்கள். (ஸூரா: மர்யம்; ருகூ: 2.)

### இப்ராஹீம் நபி தன் தந்தைக்குப் புரிந்த உபதேசம்

ஏ (முஹம்மத்) நபியே, இக்குர்ஆனில், நீவிர் (நபி) இப்ராஹிமைப் பற்றி (ஜனங்களுக்கு இவ்வாறு) பிரஸ்தாபித்து (வரலாறு) கூறுவீராக: "ஐயமின்றி, அவர் உண்மையான நபியாக இருந்தார்; எனவே அவர் தம் தகப்பனாரை நோக்கி (இவ்வாறு பயமின்றி மறுத்துக்) கூறலானார்: 'ஏ எனது கண்ணியம் மிக்க தந்தையே, தாங்கள் இந்த விக்கிரஹச் சிலைகளை (சுவாமிகளை) ஏன் வணங்குகிறீர்கள்? இவை (தாங்கள் சொல்வதை) கேட்பதுமில்லையே; (உங்கள் செயலைப்) பார்ப்பது மில்லையே; இவற்றால் உங்களுக்கு ஓர் உபயோகமும் ஆவதில்லையே! ஏ எனது கண்ணியம் மிக்க தந்தையே, தங்களுக்குக் கிடைக்காத ஞானோதயம் (அறிவு) எனக்குக் கிடைத்திருக்கிறது.

18706

ஆதலின் தாங்கள் என்னை பின்பற்றி (என் மார்க்கப் பிரகாரம்) நடப்பீர்களாக. நான் உங்களுக்கு (ஏக தெய்வ வணக்க) நேரான மார்க்கத்தை காண்பித்துக் கொடுப்பேன்; ஏ எனது கண்ணியம் மிக்க தந்தையே, தாங்கள் (வழி கெடுக்கும்) ஷைத்தானுக்கு வழிப்படா தீர்கள்; நிச்சயமாய் அந்த ஷைத்தான், இறைவனுக்கே விரோதி யாவன்; தந்தையே, (தாங்கள் நல்வழிக்கு வராதிருந்து விட்டால்) தங்கள் மீதும் ஆண்டவனுடைய (அதாபு எனும்) தண்டனை உண் டாய் விடுமோ என்று நான் அஞ்சுகிறேன். தாங்கள் (எனக்கு வழி படா விட்டால்) பின்னர் ஷைத்தானுடன் (நரகத்தில்தான்) கிடப் பீர்கள்" (என்று உபதேசம் செய்தார்). இதற்கு (நபி) இப்ராஹீ முடைய தகப்பனர் (பதில்) சொன்னதாவது:—"ஏ இப்ராஹீமே, நீ என்னுடைய தெய்வங்களை விட்டு முரண்பட்டவனாகி விட்டாயோ! நீ இந்த காரியத்தை விட்டு மீளாவிட்டால் (என் சுவாமியை நிந்தித் தால்) நான் உன்னை கல்லாலடித்துக் கொன்று விடுவேன். எனவே, உனக்கு க்ஷேமம் வேண்டுமாயின், (இப்போதே) நீ என் சமுகத்தை விட்டு (எங்கேனும்) போய்விடுவாயாக" (என்று விரட்டினர்.) அதற்கு, இப்ராஹீம் (நபி), "அஸ்ஸலாமு அலைக்கும்; (இதோ நான் போய்விடுகிறேன்;) மேலும், என் மீது மகா கிருபையாளனாகிய என்னுடைய இரக்ஷகனிடம், உங்களுடைய பாப மன்னிப்புக்காக நான் பிரார்த்தனை செய்கின்றேன்: (இன்று முதல்) நான், உங்களை விட்டும், ஏக இறைவனை, நிராகரித்து நீங்கள் வணங்கும் படியான (விக்கிரஹத்) தெய்வங்களை விட்டும் ஒதுங்கிக் கொள்கிறேன். என்னு டைய சத்தியமான இரக்ஷகனையே (இனி உதவிக்கு) அழைத்துக் கொள்வேன். நான் என்னுடைய இரக்ஷகனிடம் உங்களுக்குப் (பாதகமாய்) பிரார்த்தனை செய்து துர்பாக்கியனாக மாட்டேன் என்று நம்பிக்கை வைக்கிறேன்"—(இவ்வாறு முடிவாக கூறிவிட்டு) இப்ரா ஹீம் (நபி), அந்த (விக்கிரகத் தொழும்பரான) ஜனங்களை விட்டும், அல்லாஹ்வை மறந்து அவர்கள் வணங்கி வந்த (பொய்த்)தெய்வங்களை விட்டும், சம்பந்தம் அற்றுத் தனித்துப் போய் விட்டார்கள். பிறகு (இறைவனாகிய) யாம், அவருக்கு இஸ்ஹாக், யஃகூப் போன்ற (நபித்துவம் பெற்ற) சத்புத்திரர்களை அருள் பாலித்தோம். அவர்க (ளுடைய புத்திரர்க)ளில் ஒவ்வொருவரையும் நாம் தீர்க்கதரிசியாக்கி வைத்தோம். பொதுவாக, அம்மூன்று (முக்கியமான) பேர்களுக் கும் எமது (சொந்த) அருட் கொடை கொண்டு (யாவும்) அளித் தோம்; உலகத்தில் அவர்கட்கு கீர்த்திப் பிரதாபத்தையும் உண்டாக்கி னேம்."

(ஸூரா: மர்யம்; ருகூ: 2.)

## திருத் தூதர் இஸ்மாயீல் உண்மை நபியாய் விளங்கினர்

ஏ (முஹம்மத்) நபியே, இந்தக் குர்ஆனில், நீவிர், (நபி) இஸ் மாயீலைப் பற்றியும் (ஜனங்களுக்கு) பிரஸ்தாபம் (இவ்வாறு) செய்

வீராக: "அவர், வாக்குறுதி நிறைவேற்றுவதில் உண்மையாளராக இருந்தார். அவர் ஆண்டவனுல் அனுப்பப்பட்ட திருத் தூதராகவும் இருந்தார். அவர் தம், குடும்பத்தினர்களுக்குத் தொழுகை பற்றியும் ஜக்காத் பற்றியும் கட்டளை யிட்டு வந்தார். மேலும் அவர் தம் இரக்ஷகனிடத்தில் மிகவும் (பக்தி விசுவாசத்தினுல்), ஒப்புக் கொள்ளப் பட்டவராகவு மிருந்தார்." (ஸூரா: மர்யம்; ருகூ: 4.)

## திருத் தூதர் இத்ரீஸலைஹிஸ்ஸலாம் உண்மை நபியா யிருந்தார்

ஏ (முஹம்மத்) நபியே, இந்தக் குர்ஆனில் (ஜனங்களுக்கு நபி,) இத்ரீஸைப் பற்றியும் (இவ்வாறு) பிரஸ்தாபம் செய்வீராக: அவரும் (நேர்மையான கடமைகளினுல்) உண்மை நபியாக விளங்கினுர். எனவே (இறைவனுகிய) யாம், அவரை பூமிலோகத்திலிருந்து (வானத்துக்கு) உயர்த்தி (சுவர்க்க லோகத்தில்) கொண்டு போய், (வைத்து) ஓர் உன்னதமான ஸ்தானத்தால் அருள் புரிந்தோம்." (ஸூரா: மர்யம்; ருகூ: 4.)


# இரத்தச் சின்னம்

இது திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த
ஒரு துப்பறியும் நாவல்.

சிரச்சேதம் செய்யப்படுவதினின்று சீர்கெட்ட குற்றவாளி யொருவன் தற்செயலாகத் தப்பிப் பிழைத்திராவிடில், இரத்தச் சின்னம் என்னும் இரகசியக் குழு இயங்கத் துவங்கிஇராது. நீதி பரிபாலனத்தில் பரிதவிக்கத் தக்க முறையில் நிகழ்ந்த இந்த அசம்பா விதத்துக்குச் சில வருடங்களுக்குப் பிறகு இரக்க சிந்தையற்றவனெருவன் இங்கிலாந்தில் இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடலானுன். தீர்க்க ஆலோசித்து திட்டமிட்டுத் திறமையோடும் தீரத்தோடும் செயலாற்றுவதன் மூலம் தனக்கு உதவியாளர்களாக ஏராளமான ஆட்களைச் சேகரித்துக் கொண்டான் அவன். ஒருவருக்கொருவர் பரஸ்பர பழக்கமில்லாமலும் அறிமுகமில்லாமலும் அதியற்புதச் செயல்கள் புரிந்த இந்த இரகசியக் குழுவிற்குத் தலைமை தாங்கிய மர்ம மனிதன் இரத்தச் சின்னம் என்று கையெழுத்திட்டான்.

அவனின் மர்ம இரகசியத்தைக் கண்டு பிடித்தல் மிக ஆச்சரியமானது. இதன் விலை ரூ. 1—4—0

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.




# பள்ளிச் சிறுவர்க்கு மதக் கல்வி அவசியம்.

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

அருமைச் சிறுவர்களே !

'ராஜாஜி' என்ற சுருக்கமான பெயரை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அது "ஸி. ராஜகோபாலாச்சாரியார்" என்ற பெயரின் அருமையான சுருக்கமாகும். "ஸி. ஆர்" என்றும் சிலர் சொல்வார்கள்.

அந்த அருமைப் பெயருடைய ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் என்ற பெரியார், பெரிய தேச பக்தர்; மாபெரும் தேசியத் தலைவர். இந்தியர் சமூக மாணிக்கமாய் விளங்கி அமரத்துவம் பெற்று மறைந்த மகாத்மா காந்திஜியின் சம்மந்தி இவர். அதாவது இவரது புத்திரியை காந்திஜியின் புத்திரர் கலியாணம் செய்து கொண்டார்.

இத்தகைய பெருமை வாய்ந்த ராஜாஜி அவர்கள், கொஞ்ச நாளைக்கு முன் சென்னையில் பிரதமராகவும் மாபெரும் தேசிய வழிகாட்டியாகவும் இருந்தார். சமீப காலத்திற்கு முன், இந்தியாவின் தலைநகரான டில்லிமாநகரில் இந்தியாவின் கவர்னர் ஜெனரல் என்ற ராஜப்பிரதிநிதியாகவும் இருந்தார். இப்போது, அந்தப் பெரிய பதவிகளையெல்லாம் விட்டுப் போட்டு, அரசியல் கிளர்ச்சிகளை விட்டும் முழுதும் ஒதுங்கி யிருந்து, பொது ஜனங்களுக்கு ஆத்மீக நன்மை தரும் மத விஷயங்களில் மட்டும் ஈடுபட்டு சேவை செய்து வருகிறார்.

நமது தலைவர் ராஜாஜி, மதபக்தி உடையவர்; நல்ல குண சீலர்; ஒழுக்கம் நிறைந்தவர். அடக்க ஒடுக்கமானவர். ஆனால் சர்வலோக ராஜீய விஷயங்களை யெல்லாம் கரைக்கண்டு அறிந்த நிபுணர்.

இப்படிப்பட்ட அருந்தலைவர், சில நாட்களுக்கு முன், ஓர் அருமையான பிரசங்கம் செய்தார். அதில் "**பள்ளிக்கூடங்களில் படிக்கும் சிறு பையன்களுக்கும், அவர் அவர்களுடைய மதாசார ஒழுக்கம் கற்பிக்கும்படியான மதக்கல்வியை எல்லாப் பள்ளிகளிலும் அவசியம் கற்பித்துக் கொடுக்க வேண்டியது சர்க்காரின் கடமை**" என்று வற்புறுத்திப் பேசினார்.

பிள்ளைகளே, நம் முஸ்லிம்களுக்கு இது ஒரு புதுமையான விஷயமில்லை; "தலபுல் இல்மி அலா குல்லி முஸ்லிமின், வ முஸ்லிமத்தின்" அதாவது "இஸ்லாமிய சன்மார்க்கக் கல்வியை கற்றுக் கொள்வது (கற்றுக் கொடுப்பதும்) ஒவ்வொரு முஸ்லிமான ஆண்பிள்ளை மீதும், முஸ்லிமான பெண்பிள்ளை மீதும் அத்தியாவசியமான கடமை (பர்ல்) ஆகும்" என்று இருலோக நாதர், நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் திருவுளமாய், நமக்குக் கட்டளை யிட்டுள்ளார்கள். இதன் படியே தான் உலகிலுள்ள சர்வதேச முஸ்லிம்களும் தம் பிள்ளைகளுக்கு 'பிஸ்மில்லாஹ்' என்று தொடங்கி, குர்ஆன் ஷரீப் ஓதவும், கிதாபுகள் ஓதி உணரவும் கற்றுக் கொடுத்து வருகிறார்கள்.

ஆனால், நம் இந்தியா தேசம் சுதந்திரம் அடைந்த பின், கல்வி அதிகாரிகள், பிள்ளைகளுக்கு அவரவர் மதக்கல்வியை கற்றுக் கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள். எனினும் இப்போது, தலைவர் ராஜாஜியுடைய புத்திமதிப்படியேனும், பள்ளிக்கூடங்களில் முஸ்லிம் பிள்ளைகளுக்கு இஸ்லாமியப் படிப்பைக் கற்றுக் கொடுப்பார்களென்று ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

---


# கைத்தொழில் சம்பாதனை வழிகள்

சொற்ப பணத்தை வைத்துக் கொண்டு ஏதாவது ஒரு சிறுவியாபாரம் செய்யலாம் என்ற உத்தேசத்துடன் இருக்கும் ஆட்களுக்கு தேவைப்படும் விஷயங்களை நூற்றுக் கணக்காக இந்த புஸ்தகம் கொண்டுள்ளது. இந்த புஸ்தகத்தில் உள்ள முக்கிய விஷயங்களுக்கு அட்டவணை அகராதி முறையில் 16 பக்கங்கள் கொண்டது சேர்க்கப்பட்டிருக்கிறது.

இந்த புஸ்தகம் 224 பக்கங்கள் கொண்டது. இதை பெதர்வைட் காகிதத்தில் அச்சிட்டு நேர்த்தியான கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ. 2—8—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# சிறைப் பறவை சிப்கத்துல்லா

## அல்லது

# துப்பு துலக்கிய தூயவர்.

### அத்தியாயம் 6.

"என்ன, சிப்கத்துல்லா! ஓட்டப் பந்தயத்துக்காக ஓடிப் பழகிக் கொள்கிறாயா?"

"சமையல்காரியைப் பற்றிச் சொல்கிறீர்களா? அவள் அழகி அன்றோ?"

"வாஸ்தவந்தான்"

ஜீனத்துன்னிஸாவுடன் பேசிக்கொண்டிருந்ததை அவர் கேட்டுக் கொண்டிருந்தாரா? சிப்கத்துல்லாவின் மனதில் எழுந்த கேள்வியும் பயமும் அதுதான். சலவைக்கல் ஆசனத்துக்கும் கரீமுல்லா நின்று கொண்டிருந்த புதருக்குமிடையே ஆறடி தூரம் இருந்தது. எந்த சமயத்திலாவது அவர் அங்கு வந்திருந்தால்....

"நீண்ட நேரமாக காத்துக்கொண்டிருக்கிறீர்களா?"

"இல்லை, ஜீனத்திடம் விடைபெறும்போது உன்னை நான் பார்த்தேன். அவள் மிக நல்லபெண்; அசாதாரண அழகுள்ளவள். அவளைப் போன்ற அழகியை எங்கும் கண்டதாக எனக்கு நினைவில்லை. நீங்கள் இருவரும் எதைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தீர்கள்?"

"காலத்தின் கொடுமை குறித்தும் காதலின் போக்கு பற்றியும் பேசிக் கொண்டிருந்தோம்"

அவனது கரத்தைப் பற்றி அவனைத் தோட்டத்துக்குள் அழைத்துச் சென்றவாறு, கரீமுல்லாகான் வினவினர் "அழியுந்தன்மையுள்ளதும் அற்பமானதுமான விஷயங்களைப் பற்றியா விவாதித்துக் கொண்டிருந்தாய்? உள்ளே வந்து, சாப்பிடு. தம்பதிகள் வெளியே புறப்படப் போகிறார்கள். மணப்பெண் மரியம் இப்போது உடை மாற்றிக் கொண்டிருக்கிறாள். எனது புதிய மருமகனைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"

முன்போல 'குஷி'யாகவே அவர் பேசினர். விசாலமான விருந்து மண்டபத்துக்குள் அவர்களிருவரும் நுழைந்து, மருமகனின் தோளில் கரீமுல்லாகான் கைகொடுத்தபோதுதான் அவன் பெருமூச்சு விட்டான். அவருக்கு உண்மை புலனாகவில்லை போலும்! சதி அம்பலத்தைத் தொடர்ந்து ஏற்படக்கூடிய நிலைமை பற்றியல்லவா அவன் அஞ்சிக்கொண்டிருந்தான். அவனது பயம் அர்த்தமற்றது, ஆதார/

மற்றது என்பது இப்போது விளங்கி விட்டது. எனவே, அவன் மனதில் இறைவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டான்.

விருந்து மண்டபத்தில் முப்பத்தாறு பேர் உட்கார்ந்திருந்தனர். மணப்பெண்ணும் புத்தாடை புனைந்து அங்கு கடு காயகமாக வீற்றிருந்தாள். உள்ளே நுழைந்ததும் அவள் மீது சிப்கத்துல்லா கண்ணோட்டம் செலுத்தினன். ஆனல், அவனை அவள் ஏறிட்டுப் பார்க்கவில்லை. அவளது இடது புறத்தில் அவளது தந்தையும் அவருக்கு அடுத்தபடியாக கத்தீபு சாஹிபும் வீற்றிருந்தனர். கிக்காஹ் செய்து வைத்த கத்தீபு சாஹிபுக்குப் பக்கத்தில் தோழிப் பெண்ணும் அவளுக்கு அருகில் உட்கார்ந்திருந்த மனிதருக்கு பக்கத்தில் அவன் அமர்ந்து கொண்டான்.

அந்த மனிதரை அவன் உடனே உணர்ந்து கொண்டான்.

"சிப்கத்துல்லா, வெளியே சென்றிருந்தாயா?" துப்பறியும் இலாகா இன்ஸ்பெக்டர் இனயத்துல்லா மிக மிருதுவான குரலில் கேட்டார்; அவர் யாரிடம் பேசினரோ அந்த மனிதனைத் தவிர வேறு எவரும்—அருகில் இருந்தவர்கூட—அவரது பேச்சைக் கேட்டிருக்க முடியாது.

விருந்துண்போரின் வீண்பேச்சுக்களும் இடையிடையே எதிரொலித்த சிரிப்புக் குரல்களும் இவ்விருவரும் அந்தரங்கமாகச் சம்பாஷித்துக் கொள்வதற்கு வசதியாக விருந்தன.

பட்லர் பஷீர் பரிமாற வந்தபோது சிப்கத்துல்லாவுக்கு இன்ஸ்பெக்டர் கண்சாடை காட்டினர்.

"பஷீர் இன்னும் இங்குதான் வேலைசெய்து கொண்டிருக்கிறனா? நல்லமுறையில், நாணயமாக நடந்துகொள்கிறனா?"

"இயல்பாகவே நான் நாணயமாகத்தான் நடந்துவருகிறேன். போலீஸ் 'புலி' களைக் காண்பதால்மட்டும் எனக்கு நேர்மை வந்து விடவில்லை" இவ்வாறு பஷீர் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

துப்பறியும் உத்தியோகஸ்தரின் கடுமையான தோரணை மட்டுப்பட்டது.

"அவ்வாறு சொல்லக்கூடிய வேறு மனிதர்கள் நிறைய இருக்கிறார்களப்பா" என்று சொல்லி, அடுத்த விருந்தாளியைக் கவனிப்பதற்காக அவன் சென்றதும் அவர் மேலும் கூறினர்: "அவன் சொல்வது முற்றிலும் உண்மை. பஷீர் ஒருபோதும் கெட்ட மனிதனல்ல. ஒரே ஒரு தடவைதான் அவன் தவறு செய்தான்—கான்சாஹிபின் சிந்தனசக்தியைப் பெற்றிருந்தால் இதனைக்கூட அவன் செய்திருக்க மாட்டான்"

"என்ன சொல்கிறீர்கள்? கான்சாஹிபின் சிந்தனசக்தியா?" சிப்கத்துல்லா வினவினன்.

"கரீமுல்லாகானின் தற்போதைய சிந்தனைசக்தியை நான் குறிப்பிடவில்லை. பதிநான்கு அல்லது பதினைந்து வருடங்களுக்கு முன்பு அவர் பெற்றிருந்த அபார திறமையைப் பற்றியே பேசுகிறேன். அவர்கள் அனைவரிலும் அறிவிற் சிறந்தவராக அவர் விளங்கினர். தீரஆலோசித்துத் திறம்பட செயலாற்றுவதிலும் கொள்ளை நிகழ்ந்த இடத்தில் இருக்க வில்லை யென்பதை நிரூபித்துத் தண்டனையி னின்று தப்பித்துக் கொள்வதிலும் அவருக்கு அவரே நிகர். அவரைக் கையும் களவுமாகப் பிடித்து விட வேண்டு மென ஒவ்வொரு போலீஸ் உத்தியோகஸ்தரும் கங்கணம் கட்டி காரிய மாற்றிய போதிலும் அவரது திட்டத்தில் குறைபாடுகளைக் காண்பதரிது. அவரது செயல்கள் ஒவ்வொன்றிலும் சாமர்த்தியமும் சாதுரியமும் பொதிந்திருந்தது. எனவே, அவரைக் கைது செய்து விட்டால் கூட விசாரணையின் போது கௌரவமாக விடுதலையாவதோடு மான கஷ்டமும் கோரிப்பெற்று விடுவார்!"

"உங்கள் புகழ்ச்சியைக் கேட்டு புளகாங்கிதம் அடைவார் அவர்."

"ஆனல், நான் கூறியது உண்மை. அவர் தந்திரமாக எழுதிய கடிதங்கள் அனைத்தும் எங்களை ஏமாற்றுவதற்கே யாகும். கடிதங்களைக் கொண்டு காரிய சாதனை புரிந்தவர் அவர். ஓரிடத்தில் மக்களை ஒன்று திரட்டி, விரும்பிய இடத்துக்கு அவர்களை வரச் செய்து, அங்கு அவர்கள் இருப்பதைப் பயன்படுத்திக் கொண்டு விடுவார். போலீஸ் கமிஷனரைக்கூட ஒரு தடவை அவர் ஏமாற்றி விட்டார். இரவு 12–10 மணிக்கு வேலூர் கோட்டை வாயிலில் கமிஷ்னரை நின்றிருக்கச் செய்து அங்கு தானும் தலையைக் காட்டி கொள்ளை நிகழ்ந்த சமயத்தில் கமிஷ்னருடன் இருந்ததாக நிரூபித்துத் தப்பித்துக் கொண்டார்."

"அவரும் நீங்களும் நல்ல நண்பர்களாக இருப்பது குறிப்பிடத்தக்க தென மக்கள் நினைத்துக் கொள்வார்கள் என்று எண்ணுகிறேன்."

"எங்களிருவரின் நட்பு குறிப்பிடத் தக்க தெனச் சொல்ல மாட்டார்கள்; சந்தேகாஸ்பதமானது என நினைப்பார்கள்."

"தேநீர் அருந்துகிறீர்களா?" என்று வினவி, மேஜை மீது கோப்பையில் தேநீர் ஊற்றலானர்.

"வந்தனம். எங்கள் தொழிலில் நாங்கள் சுறுசுறுப்பாக இருக்க வேண்டி யிருக்கிறது. எனவே, கஷாயம் அதிகம் போட்ட காப்பி தான் எங்களுக்கு உகந்த பானம். ஆயினும் உங்கள் வற்புறுத்தலுக்கு இணங்கி, தேநீர் அருந்துவதற்குத் தயாராக இருக்கிறேன்."

(தொடரும்)

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

18761

# தாரீகுல் குலபா

## இஸ்லாமிய கலீபாக்களின் அரசாங்க சரித்திரங்கள்

நமது இஸ்லாமிய கலீபாக்களின் சரித்திர விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது எல்லா முஸ்லிம்களுக்கும் அத்தியாவசியமான கடமையாகும். ஏனெனில் இச்சரித்திரங்களில் இஸ்லாமின் ஆரம்பமும், இஸ்லாத்தை நிலை நாட்டிய தத்துவங்களும், இஸ்லாத்தின் பக்தி விசுவாசங்களும், இஸ்லாத்தின் சமத்துவங்களும், இஸ்லாத்தின் நீதி பரிபாலனங்களும் ஒருங்கே நிறைந்திருக்கின்றன. ஆதலின், இம்மகிமை பொருந்திய சரித்திரங்களை ஒவ்வொரு முஸ்லிமும் முஸ்லிம் அல்லாதாரும் அவசியம் வாசிக்க வேண்டும்.

இதில் முதற் பாகமாக நம் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரித்திரமும், முதல் கலீபாவாகிய ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரமும் அடங்கியது. கிளேஸ் காகிதத்தில் கிரௌன் 8-பேஜ் சைஸில் அச்சிடப்பட்டு பைண்டு கட்டியது. விலை ரூ. 1—8—0

மேற்படி இரண்டாவது பாகம்: இதில் ஹஸரத் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரம் விரிவாய் எழுதப் பெற்றது. விலை ரூ. 1—4—0

மேற்படி மூன்றாம் பாகம்: இது ஹஸரத் உஸ்மான் (றலி) அவர்களின் கிலாபத்தும், ஹஸரத் அலி (ரலி) அவர்களின் கிலாபத்தும், ஹஸரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்களின் கிலாபத்தும், பனீ உமையாவின் கிலாபத்தும், அப்துல் மலிக் அவர்களின் கிலாபத்தும் ஆக 5-கிலாபத்து ஆட்சி வரலாறுகள் அடங்கியது. விலை ரூ. 1—4—0

ஷை மூன்று பாகமும் சேர்ந்தது ரூ. 3—8—0

---

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# முரீது உபதேசம்

இதில் அடங்கியுள்ள விஷயங்களாவன:—உண்மை பக்கிர்கள் யார்? இராதத்—முரீத்—முருதத் விபரம், முரீத்யென்பவர் யார்? தஸவ்வுப் விபரம், முரீதின் ஆரம்ப நிலை, ஷேக் சன்னிதானத்தில் முரீதின் மரியாதை, முரீதுக்கு ஷைக் ஆதரவு, சமா என்னும் புகழ் பாடக் கச்சேரி விபரம், முரீதுக்கு பீர்ஸாஹிபிடம் இருக்க வேண்டிய பய்பக்தி, முரீதுக்கு ஷைக் ஸாஹிபின் உபதேசப் பயிற்சி விதம், சகோதர வாஞ்சையும் ஏனைய பழக்க உபசாரங்களும், அந்நியர் சேர்க்கை, செல்வந்தர் சேர்க்கை, பகீர்களுடன் சேர்க்கை வைத்தல், பகீர் ஸாஹிபின் எளிமைச் சிறப்பு, பகீரும் சுவால் செய்தலும், பகீர் சுகானுபவ ஒழுக்கம், பகீர் சாப்பாட்டு ஒழுக்கங்கள், தோழருடன் உபசார முறை, பிள்ளை குட்டிகளுடன் பகீரின் பழக்காசார முறை, பிரயாணத்தில் பகீர்கள் எவ்வாறு ஒழுக வேண்டும், பகீர் ஸாஹிபு இராகம் செவியுறுதல், முஜாஹிதா (தவப்பர யுத்தம்) விபரம், முஜாஹிதாவின் தாத்பரியம், முஜாஹிதாவை பூர்த்திக்கும் அம்சங்கள், ஆண்டவன் மஃரிபத், ஷைத்தானைப் பற்றிய எச்சரிக்கை, நப்ஸ் எச்சரிக்கை, ஆண்டவன் பயபக்தி, மஹான்களின் பழக்க ஆசாரங்கள், தவக்கல் என்னும் நம்பிக்கை, நற்குண சீலங்கள், ஆண்டவன் சந்நிதானத்தில் நன்னடத்தை, ஷுக்ரு (நன்றி) விபரம், ஸப்று விளக்கம், ரிஜா (சம்மதம்) உண்மை விளக்கம், பரிசுத்தம், தௌபாச் செய்தல், இராக்கால வணக்கம், நபி பெருமானாரின் இராத் தொழுகை, தனிமையில் உபதேசித்தல், உபதேச ஷர்த்துகள், நப்ஸும் ஆத்மாவும், தங்கள் ரியாஜத், குத்பு நாயகத்தின் துஆ, மதக் கல்வி முதலியவைகளை விரிவாய் விபரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முஸ்லிமும் இப்புத்தகத்தை வாங்கி படித்து பிரயோஜன மடைவது அத்தியாவசியம்.

இதன் விலை ரூ. 1—8—0

---

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.